


**'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'**

—இந்தப் பாடலடிகளாலே, ஒருமைப் பாட்டுணர்வு எவ்வளவு உயர்வானது என்பதனை நமக்குணர்த்திச் சென்றான் தேசிய கவி பாரதி. அதன் அஸ்திவாரக் கருத்தை அனைவருக்கும் வலியுறுத்திட, தமிழக அரசால் தேசிய ஒருமைப்பாடு வார விழா (25.11.80) கொண்டாடப்பட்டது.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. எஸ். சாதிக் அலி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார்.

செய்தித் துறை இயக்குநர் திரு, எம். எஸ். கோபால் வரவேற்புரையாற்ற மாண்புமிகு மேலவைத் தலைவர், டாக்டர் திரு. ம.பொ.சிவஞானம், மாண்புமிகு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி, டாக்டர் திரு, மு.மு. இஸ்மாயீல், பேராயர் சுந்தர்கிளார்க் திரு, கி.வா.ஜெகந்நாதன், திருமதி செளந்தராகைலாசம் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

ஒருமைப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப் படுவதன் காரணத்தைத் தமது வரவேற்புரையிலே விளக்கினார் செய்தித்துறை இயக்குநர் திரு எம்.எஸ். கோபால்.

'ஊருக்கு நல்லது சொல்வேன் -எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்' என்ற பார்தி பாடலில் தொடங்கி சில தேசிய ஒருமைப்பாடு பாடல்களைத் திரு எஸ். சீர்காழி கோவிந்தராசன் பாடினார்.

## மேதகு ஆளுநர்

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் பேசுகையில்-''நம்முடைய நாடு உறுதிமிக்கதாகவும் வலிவு மிக்கதாகவும் விளங்கவேண்டுமானால் ஒருமைப்பாட்டு உணர்வை நாம் ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டுவது அவசியம். தமிழகம் வகுப்புக் கலவரங்களற்ற மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ஏற்றத் தாழ்வற்ற பொருளாதாரம், சரியான சமூக நீதி ஆகியவை நிலவிட தேசிய ஒருமைப்பாடு மிகமிக அவசியம்'' என்று குறிப்பிட்டார்.

## மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"ஏழ்மை, வறுமை, வேலையின்மை ஆகிய எந்தச் சங்கடங்கள் இருந்தாலும், நாட்டு மக்கள் ஒன்று பட்டு வாழவேண்டும். மனிதனின் உடலில் ஏதாவது ஒரு பகுதியில் வலி ஏற்பட்டாலும், காயம் ஏற்பட்டாலும் அது எப்படி இந்த உடலின் ஊனமாகவே கருதப்படுகிறதோ அதேபோல்-ஒரு நாட்டில் எங்கே வன்முறை ஏற்பட்டாலும் அதை உடனடியாகக் கவனித்தாக வேண்டும். அப்படிக் கவனிக்காதவரை ஒருமைப்பாட்டுக்கு வழியே இல்லை.

தமிழரசு
மலர்: 11 இதழ்: 11
1.12.1980



இன்று தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழியை வெறும் உதட்டளவில் எடுத்துக் கொண்டால் போதாது. இந்திய சுதந்திரத்தை தைக் காப்பாற்ற நம்மாலான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும்.

எந்த நாட்டுப் படையெடுப்பானாலும் சரி; அதை வலிவோடும் உறுதியோடும் தடுத்து இந்திய சுதந்திரத்தைக் காப்போம் என்ற உறுதியை மனதில் பதியவைத்துக்கொண்டு ஒருமைப்பாடு உறுதிமொழியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

—இவ்வாறு தன் உரையிடையே குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழா முடிவில் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியைத் தமிழிலும் ,ஆங்கிலத்திலும் படிக்க, மண்டபத்தில் திரண்டிருந்தோரனைவரும் அதனைத் தாங்களும் உரத்த குரலில் சொல்லி உறுதி ஏற்றனர்.

அப்படிப் படிக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி வருமாறு:

**'நாட்டின் உறுதிமொழியையும், ஒருமைப்பாட்டையும் காப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் ஊக்கத்தோடு உழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.**

**'வன்முறைக்கு இடந்தரமாட்டேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம், அரசியல் அல்லது பொருளாதாரக் குறைபாடுகளையும், சிக்கல்களையும் அமைதியான முறையில் சட்டநெறி சார்ந்த வகையில் தீர்த்துக் கொள்வேன் என்றும் உறுதி கூறுகிறேன்.'**

—விழா முடிவில், தேசிய ஒருமைப்பாடு தொடர்பான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி, மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகளும் சான்றிதழ்களும் அளித்துச் சிறப்பித்தார்.


**தமிழரசு**

மலர் : 11 இதழ் : 11


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தேசிய ஒருமைப்பாடு வார விழா | — | 1 |
| மாமதுரைத் திருநகரில் தேமதுரத் தமிழோசை | — | 3 |
| கிராமப் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு | — | 7 |
| சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு விழா | — | 11 |
| இம்ப்காப்ஸ் | — | 13 |
| செங்கை மாவட்டத்தில் செவிக்கினிய செய்தி | — | 23 |
| தமிழ்க் கடல் தருகின்ற தரமான முத்துக்கள் | — | 27 |
| கொடுமணல்—ஒரு சங்க காலப் பேரூர் | — | 31 |
| ஓட்டுநர் பணிக்கு ஒப்பற்ற பயிற்சி | — | 41 |
| பாரதி நூல் அறுபது | — | 44 |
| பாரதி காட்டும் ஒருமைப்பாடு | — | 47 |

# மாமதுரைத் திருநகரில் தேமதுரத் தமிழோ



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

## இராம. வீரப்பன்

**தோ**ன்மை என்றும் முதுமை என்றும் இரண்டு சொற்கள் தமிழில் உண்டு. காலத்தினால் எழுச்சியும், வளர்ச்சியும் பெற்று பிறகு மூத்து மெல்ல தளர்ந்து போவதை முதுமை என்றுசொல்ல லாம். காலத்தால் பழமையாக இருந்தாலும், தன்னுடைய வளர்ச்சியாலும், வனப்பினா லும், வதங்காமல் வாடாமல் ஊட்டத்தோடும், உறுதியான இளமையோடும் திகழ்வதைத் தொன்மை நலம் என்று சொன் னால் பொருந்துவது போலத் தோன்றுகிறது.

இந்த அடிப்படையில்தான் தமிழைத் தொன்மையானமொழி என்று குறிப்பிடுகிறோமே தவிர, முதுமையான மொழி என்று வழக்கமாகக் குறிப்பிடுவது இல்லை. தொன்மை வளம் இல் லாமல் முதுமையை மட்டுமே கொண்டதால் உலக வரலாற்றில் கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகள் கணக்கில் லாதவை.

கிரேக்கம், இலத்தீன், சமஸ் கிருதம் என்று இவையெல்லாம் முதுமை கொண்டு ஆற்றல் இழந்த மொழிகளென்று மொழி யியல் துறையினர் சொல்கின்ற னர்.

ஆனால் காலத்தையும்வென்று மரபையும் மாறாமல் கடைப் பிடித்துக்கொண்டு ஞாலத்தில் என்றும் குன்றாத இளமையோடு விளங்குவதால்தான் ''சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே'' என்று மனோன் மணீயம் சுந்தரம்பிள்ளை மனம் மகிழ்ந்து தமிழைப் பாராட்டி னார்.

இந்த இளமைத் திறமும் வள மும் தமிழுக்கு எவ்வாறு ஏற்பட் டது என்பதை அறிஞர்கள் ஆய்ந்து வருகிறார்கள். வரலாற் றுப் பழமையினாலா, இலக்கியச் செழுமையினாலா, நடைமுறை உண்மைகளுக்கு ஒத்துவருவ தாலா, பழமைக்குப் பழமையை யும், புதுமைக்குப் புதுமையையும் இரண்டு சிறகுகளாகக் கொண்



டிருப்பதாலோ என்றெல்
அறிஞர்கள் எண்ணத் தொ
கிய காலமே 19ஆம் நூற்ற
டின் தொடக்கத்தில்தான். ம
முல்லர், விண்டர் விட்சு போ
அறிஞர்களுக்கு வடமெ
களஞ்சியத்தைப் பற்றித் தெ
அளவுக்குத் தமிழ்க் கலைக
பற்றிய குறிப்புகளைத் தெ
கொள்கிற வாய்ப்பு இல்லா
போயிற்று.

கால்டுவெல் போன்றவ
தமிழ்மொழியை ஆர
தொடங்கிய பிறகுதான் த
தனித் தன்மையை
ஏனைய மொழிகளைப்
வடமொழியில் சார்பு இல்ல
உயர் தனிச் செம்மொழிய
தமிழ் நிமிர்ந்து நிற்ப
உலகம் உணரத் தொடங்கி
வடமொழிச் சார்பு இல்ல
இயங்க வல்ல ஓர் இனிய
இந்தியப் பெருநாட்டில்
கோடியில் இருக்கிறது
உண்மையை அப்போது
உலகமும் தெரிந்து கொள்
தொடங்கியது.

நெடுங்காலமாகவே நாக்
பழமை காரணமாக அறக்
துக்களை, குறிப்பாக இ
யங்களில் எடுத்துச் சொ
பெருமை தமிழுக்கு உண்டு.
னாலேயே தமிழைப் பிறமொ
காரர்கள் 'அறவம்' என்று
ரிட்டு அழைக்கத் தொட
னார்கள். ''தமிழில் அறநூ
அதிகமாக இருப்பதால், அற
அறவ மொழி என்ற பெயர்
பட்டு, பின்னர் அப்பெ

ம், அரவ மொழி என்று
பிருக்கலாம்' என்று குண்
என்ற மொழியியல்அறிஞர்
)றார். கிரேக்க நூல் ஆசிரிய
'டாலமி' தமது யாத்திரை
ல் சோழமண்டலத்தைப்
க் குறிப்பிடும்போது,
ஞரில் வாழ்ந்த மக்களை
ர்வானி' என்று குறித்தது
ாலேயே என்று எண்ணு
கும் இடம் இருக்கிறது.

ப்படி மொழியியல் அறி
ள் தமிழின் தொன்மையைச்
மைத் திறத்தினைப்பாருக்கு
த்த ஆரம்பித்த உந்துதல்
தொடர்ச்சியாக உருவாகி
ந்ததன் விளைவாகவே
த் தமிழ் ஆராய்ச்சி மாநாடு
பெற்று வருகிறது.

த அடிப்படையில் 1966-
ஆண்டு முதல் உலகத் தமிழ்
டுகோலாலம்பூரிலும்இரண்
து உலகத் தமிழ் மாநாடு
கத்தின் தலைநகரான
னையிலும், மூன்றாவது
த் தமிழ் மாநாடு பாரீசிலும்
ாவது உலகத் தமிழ்மாநாடு
ப்பாணத்திலும் நடை
று நல்ல பல பயன்கள்
ந்திடக் கண்டிருக்கிறோம்.

போது ஐந்தாவது உலகத்
நாடு மாநாடு தேமதுரத்
வளர்த்த மாமதுரை
கரில் நடைபெறஇருக்கிறது.
ப்போன மூலிகை நம்
விலே கிடைத்தது போல்'
ஒரு மொழி கூறுவார்கள்.
னில் 1977-ல் 'செனகல்'
த் தலைநகரான தாக்க
ந்தாவது உலகத் தமிழ்
டு நடைபெறுவதாக இருந்
அந்நாட்டுத் தேர்தலின்
மாக மாநாடு ஒத்தி வைக்
டதன் விளைவாய் சங்கம்
து தமிழ் வளர்த்த மதுரை
பேரறிஞர் அண்ணா வழி
நடக்கும் நமது அரசால்
ாது நடத்தும் வாய்ப்புக்
யுள்ளது.

த்தரங்கம், ஆய்வு அரங்கத்
ழலம் கற்றறிந்த சிலர் கூடி
க்கமாக ஆய்வுரைகளை
துவது என்பது ஒரு மரபு.
என்னும் அருவி, சிந்தனை
களிலிருந்து உருகிப் பெருகி
ன்றன என்றாலும், பொது
எனும் பொங்குமாங்
ல் போய்க் கலக்க வேண்டு
பது தான் பேரறிஞர்
ணாவின் விருப்பமும் இலட்
மாகும். கடலில் போய்க்
ால் தான் பொருளும்
பயனும் உண்டு என்று
ம் வகையில் பேரறிஞர்
ணா முதல்வராக இருந்த
உலகத் தமிழ் மாநாடு
ரங்க மாநாடு என்ற நிலை

யிலிருந்து வளர்ந்து பொது மாநாடாக அனைத்துத் தமிழரும் பங்கேற்கும் எழுச்சி மாநாடாக நடந்தது.

''முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மூவேந்தர் காலத் திற்குப் பிறகு தமிழ் ஆய்ந்த உலகத்துச் சான்றோர்கள் எல்லாம் ஒன்றுகூட வேண்டும். அதனையும் தமிழ் மக்கள் ஆர்வத்தோடு கண்டு களிக்க வேண்டும்'' என்ற நோக்கம் நிறைவேறும் வகையில் பேரறிஞர் அண்ணா நடத்திக் காட்டிய இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு திகழ்ந்தது என்பது மட்டுமல்ல. அந்தப் பேரறிஞர் 1967ஆம் ஆண்டு தமிழ் இனத்தின் தனிப் பெரும் தலைவராய் அரசுப் பொறுப் பேற்ற பிறகுதான் முதன் முதலாகத் தமிழரசு அமைந்தது. சென்னை மாநிலமாக நம் அன்னை மாநிலம் தமிழ்நாடு என்ற பெயர்பூண்டு பொலிந்தது. 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற கொள்கை இதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல் வடிவம் பூண்டது.

இத்தகைய ஈடற்ற பணிகளின் தொடர்ச்சியான முத்தாய்ப் பாகத்தான் உலகோர் வியக்கத் தக்க உலகத் தமிழ் மாநாட்டை பேரறிஞர் அண்ணா நடத்திக் காட்டினார். அவனியில் உள்ள அறிஞர் அனைவரும் கூடி தமிழ் ஆய்ந்த தன்மை இன்னும் நம் நெஞ்சக் குளத்தில் குளிர்மிகு அலைகளாய் நடக்கின்றன. அன்று நம் அண்ணன் ஆற்றிய உலகத் தமிழ் மாநாட்டு பேருரை இன்னும் நம் செவிகளில் குற்றால அருவியாய் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சரியாக 12 ஆண்டுகள் முடிந்து பேரறிஞர் அண்ணாவின் இதயக் கனி முதல்வராக வீற்றிருக்கும் இந்நாளில், மாமதுரைத் திரு நகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவது மிகவும் பொருத்தமான செயலாகும். மாநாட்டின் சிறப்பு அம்சங்களாய் உலகத்து அறிஞர்கள் பங்கேற்கும் ஆராய்ச்சிக் கருத்தரங்கம், பொங்குமாங் கடலாய், பொதுமக்கள் தமிழ் இனிமை நுகர பொதுமக்கள் கருத்தரங்கு, தமிழரின் பண்பாடு, கலை இலக்கிய வரலாறு ஆகியவற்றை விளக்கிடும் கவின்மிகு கண்காட்சி, பண்பாட்டுக் கலை, இலக்கியச் சரித்திரப் புகழ் காட்டும் வண்ண ஊர்திகளின் அலங்கார அணி வகுப்பு, கலை நிகழ்ச்சி என மாநாட்டின் சிறப்பு அம்சங்கள் மடல் மடலாய் விரிந்து மணம் கூட்ட இருக்கின்றன.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழறிஞர்கள் 100 பேர், இலங்கை, மலேசியா, சிங்கப்பூரிலிருந்து 250 பேர்; இந்தியாவிலிருந்து 400

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலை கழகம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமையில் எண்மர் கொண்ட நிபுணர் குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்திருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து அரசுக்கு இக்குழு ஆலோசனை கூறும்.

இந்தக் குழுவில் கீழ்க்காணும் தமிழறிஞர்கள் இருப்பார்கள்.

டாக்டர் வ. சுப மாணிக்கம் (தலைவர்) மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம், டாகடர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம், முன்னாள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி, புதுடில்லி டாக்டர் சாலை இளந்திரையன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் டாக்டர் மா. நன்னன், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், கல்வித்துறைச் சார் புச்செயலர் திரு ஆர். மீனாட்சி சுந்தரம்.

பேர் என 750 பேரறிஞர்கள் புதியன படைக்கும் சரித்திரத்திற்கு புது மெருகூட்ட வருகின்றனர். திரைகடல் ஓடிப் பண்பாடு பரப்பி புகழ் சேர்க்கும் தமிழர்களின் பூமியில் திரை கடலுக்கு அப்பாலும், திசைகளுக்கு அப்பாலும் உள்ளவர்கள் கூடுவது ஒரு கண்கொள்ளாக் காட்சி.

ஒரு நாட்டில் பொருளாதாரத்துக்கு எவ்வளவு வலிவு இருக்கிறதோ அவ்வளவு வலிவு ஒரு நாட்டில் பண்பாட்டிற்கும், மரபிற்கும் மொழிக்கும் உண்டு. ஒரு நாட்டிற்கு வேர்போல பண்பாடு திகழ்கிறது என்றால், அதன் மலர்களும் கனிகளும் போலத்தான் கலை இலக்கியங்களும், கருத்தரங்குகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் ஆகும்.

கடந்த காலத்தில் நடைபெற்ற இத்தகைய உலகத் தமிழ் மாநாடுகளின் விளைவுதான் உலகில் குறைந்தது 40 நாடுகளிலாவது அம்மொழிகளோடு தமிழுக்குத் தொடர்புஇருக்கிறது என்பதை இன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆப்பிரிக்க நாட்டில் வடமேற்குப் பகுதியில் வழங்கும் மொழிகளோடும், ஸ்பெயின் பிரான்ஸ், ஐரோப்பாவின் வட மேற்குப் பகுதிகளில் விளங்கும் மொழிகளோடும் தமிழுக்குத் தொடர்பு இருப்பதை இப்போது அறிஞர்கள் குறிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஜப்பானிய மொழிச் சொற்களுக்கும், தமிழ்ச் சொற்களுக்கும் நெருங்கிய உறவு இருக்கின்றன என்று ஜப்பானிய நாட்டு அறிஞர் சுசுமு ஒனோ அண்மையில் சொல்லியிருக்கக் காண்கிறோம்.

எல்லாக் காலங்களிலும் எல்லா மொழிகளும் மாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கின்றது. மொழி மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுக்கு தனித் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டதில்லை. ஆனால் தமிழ் மொழி ஒன்றுதான் தனது தனித்தன்மையை இரண்டாயிரம் ஆண்டுகளாய் இழக்காமல் கன்னிமையோடு காத்து வருகிறது என்று கூறுகின்ற நிலை அத்தகைய மாநாடுகளின் விளைவாக உருவாகி இருக்கிறது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதை ஏட்டு மொழியாக மட்டும் எழுதி வைக்காமல் தமிழ் நாகரீகத்தின் எதிரொலி
யாகவும் நாம் படைத்து
கிறோம் என்பதற்கு எடு
காட்டுதான் இந்த உலகத்
மாநாடு.

அறிவும், ஆர்வமும், ஆற்
எழுச்சியும், உழைப்பும் ஊக்
கொண்டவர்கள் அத்த
பேரும் பங்கு பெறுவதோ
மாநாட்டின் விளைவாக
பண்பாட்டின் அகல, நீள
ரங்கள் அதிகரிக்கும் என்
உணர்ந்து நாட்டு மக்கள்
வரும் மகிழ்ச்சியோடு
கொள்ளவிரும்பி வரவேற்கி
மாண்புமிகு முதல்வர் புர
தலைவர் திரு. எம். ஜி.
அவர்களின் இதய வேட்
இதுதான்.

49 புலவர்களைக் கொ
தாக மிளிர்ந்தது பழைய
சங்கம்; 49 புலவர்கள் அல்
நாடுகளைச் சார்ந்தவர்கள்
கிறார்கள் என்பது நமக்கு
லாப் பெருமிதத்தைத் தரு
உலக அறிஞர்கள் கூடி, கூ
நடத்தும் இந்த மாநா
தமிழ்ப் பண்பாடும் நாகரி
பட்டொளி வீசிப் பறக்க
புதிய தமிழ்ச் சங்கம் க
உலகத் தமிழ் மாநாடு என்
றும் சிறப்படையட்டும்.





## பாரதியை நினைத்திட்டால்...!

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை

ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்தரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்
ப்ரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும்
'இந்தியன்நான்' என்றிடும்நல் லிறுமாப் புண்டாம்!
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும்
ஒப்பரிய தமிழன்எனும் உவகை ஊறும்
உள்ளமெலாம் துள்ளியெழும் ஊக்கம் உண்டாம்!

## அணையாத விளக்கு

பாவேந்தர் பாரதிதாசன்

மிழ்த்தேர்ப் பாகன் அவனொரு
மிழ்த் தேனி; சிந்துக்குத் தந்தை
கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
துயில்நீக்கப் பாடிவந்த நிலா
கமழும் கற்பூரச் சொற்கோ!
பனை ஊற்றாம் கதையின் புதையல்
றம்பாட வந்த மறவன் புதிய
றம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
டரும் சாதிப் படைக்கு மருந்து;
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்;

## பாட்டுக்கொரு புலவன்

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயோடா!

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமேயடா—கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமேயடா
கல்லும் கனிந்துகனி யாகுமேயடா—பசுக்
கன்றும்பால் அருந்திடாது கேட்குமேயடா.





# கிராமப் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு

மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர்
திரு சி.பொன்னையன்

நமது பொருளாதார முன்னேற்றத்தில் குறிப்பாக கிராமப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் கூட்டுறவுத்துறை மிகச் சிறப்பான இடத்தை வகிக்கின்றது. மக்கள் தொகையில் 85% கிராமங்களில் வாழக் கூடியவர்கள். இந்தப் பெரும்பான்மை மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தாத எந்தத் திட்டமும் சிறப்பாகக் கருதப்படத்தக்கதல்ல, பெரும்பான்மையான கிராமங்களில் விவசாயத்தையும் அதைச் சார்ந்த தொழில்களையும் நம்பியே மக்கள் வாழ்கின்றனர். இன்றைக்குக் கூட்டுறவுத் துறை; விவசாயத்திற்கும் அதனைச் சார்ந்த துணைத் தொழில்களுக்கும் பல்வேறு வகைகளில் உதவி செய்து வருகின்றது.

தமிழ்நாட்டில் மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு ஒரு சங்கம் வீதம் சுமார் 4,700 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாயம் மேற்கொள்வதற்காகக் குறுகிய காலக் கடன்களையும், உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற இடு பொருள்களையும் வழங்கி வருகின்றன. சொத்து ஆதாரமின்றி, உறுப்பினர்களின் பிணையத்தின் பேரிலேயே நபர் ஒன்று 15,000-ரூபாய் வரையிலும், சொத்து ஆதாரத்தின் பேரில் நபர் ஒன்றுக்கு 20,000 ரூபாய் வரையிலும், கரும்புச் சாகுபடிக்கு நபர் ஒன்றுக்குச் சொத்து ஆதாரமின்றி 20,000-ரூபாயும், சொத்து ஆதாரத்தின் பேரில் 25,000-ரூபாயும் வழங்குகின்றன. இது தவிர உழவு மாடுகள், கருவிகள், தெளிப்பான்கள் முதலியவை வாங்க மத்திய காலக் கடன்களையும் வழங்குகின்றன. குறுகிய காலக் கடன்களுக்குச் சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவீதமும், மற்ற விவசாயிகளுக்கு 12 சதவீதமும் வட்டி வசூலிக்கப்படுகின்றது. மத்திய காலக் கடன்களுக்கு 11 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகின்றது. இந்த அளவு, எளிய நிபந்தனைகளின் பேரில் குறைந்த வட்டி வீதத்தில், விவசாயத் தொழிலுக்குக் கடனும் இடுபொருள்களும் வழங்க கூட்டுறவுச் சங்கங்களைத்தவிர, வேறு எந்த அமைப்பும் இல்லை.

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளின் நீண்டகாலக் கடன் தேவைகளை வட்டம் மற்றும் வட்டார அளவில் உள்ள பிரதம நிலவள வங்கிகள் நிறைவேற்றி வருகின்றன. இவ் வங்கிகள் விவசாயிகளின் நிலங்களின் அடமானத்தின் பேரில் நிலச்சீர்திருத்தம், கிணறு வெட்டுதல், கிணறுஆழப் படுத்துதல், பம்பு செட்டுகள் வைத்தல், குழாய்கள் பொருத்துதல், ரப்பர், காபி, தேயிலை மற்றும் அதிக வருவாய் தரக் கூடிய லெமன்க்ராஸ் போன்ற பணப் பயிர்கள் உற்பத்தி செய்ய ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்ற காரியங்களுக்கும் நீண்ட காலக் கடன்கள் வழங்குகின்றன. இவ்வகைக் கடன் திட்டங்கள் விவசாய மறுநிதி மற்றும் அபிவிருத்திக்கழகஉதவியுடனும் உலக வங்கியின் உதவியடனும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தவிர்வும், நிலமில்லாத மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ள விவசாயிகளுக்கு ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்ற காரியங்களுக்கு நில அடமானம் இல்லாமல் அரசின் உத்தரவாதத்தின் பேரில் கடன் வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசு அண்மையில் ரூபாய் ஐந்து கோடி வரை உத்தரவாதம் அளித்துள்ளது. நிலம் அடமானம் இல்லாமலேயே உதவுகிற இத்திட்டத்தை இன்னும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு நுகர்வோர் இணையமும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மாநிலத்தில் உள்ள 29 மொத்த விற்பனைப் பண்டகச் சாலைகளுக்குத் தேவைப்படும் மிக அத்தியாவசியப் பண்டங்களை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக, அறுவடைக் காலங்களில் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் தங்களது சிறப்பங்காடிகள், சிற்றங்காடிகள் கிளைகள் மற்றும் பிரதம பண்டகச் சாலைகள் மூலம் இப் பண்டங்களைப் பொதுமக்களுக்கு விற்பதால், நியாயமான விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

**சுமார் 160 கோடி ரூபாய் அளவுக்கு ஒரு ஆண்டில் பண்டங்கள் விற்கப்படுகின்றன. 11101 கிராமக் கடைகள் மூலம் கிராமங்களி**

லும் நியாயமான விலைக்குப் பண்டங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மொத்தக் கொள்முதலைப் பெருக்கவும், சீராக்கவும், மண்டல விநியோக மையம் கோயம்புத்தூரில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. சென்னை, செங்கல்பட்டு மற்றும் வடஆர்க்காடு மாவட்டங்களுக்காகச் சென்னையில் ஒரு மண்டல விநியோக மையம் அடுத்த ஜனவரியிலிருந்து செயல்படவிருக்கிறது. வாங்கி உண்ணுகிற நுகர்வோருக்கு நியாயவிலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும். அதே நேரத்தில் உற்பத்தி செய்கின்ற உழவர்களுக்கும் உற்பத்தி செலவிற்கு ஏற்ற வருவாய் விளைபொருள்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால், தற்போது நுகர்வோர்க்கும், உற்பத்தியாளர்களுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு சதவீதத்திற்கும் குறைவாக உள்ள இடைத் தரகர்கள் அந்த இரு சாரார் நலனில் தடைக் கற்களாக உள்ளனர். கூட்டுறவு இயக்கம் ஒன்றால்தான், உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்பு மூலம் உழவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்யவும், நுகர்வோருக்கு நியாய விலையில் பொருள் கிடைக்கவும் வகை செய்ய முடியும். இந்த முயற்சியில் நடப்பு ஆண்டிலிருந்து தமிழக அரசு பல விரிவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

தற்போதைய நிலை ஒரு தற்காலிக நிலை. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும், நிலவள வங்கிகளும் 1977-78ஆம் ஆண்டில் விவசாயத்திற்காகக் குறுகியகால, மத்திய கால, நீண்ட காலக் கடன்களை 139 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கின. அடுத்த இரண்டு ஆண்டுகளில், தவணை கடந்த கடன் நிலுவை அதிகரித்ததன் காரணமாக, இச் சங்கங்கள் வழங்கிய கடன் அளவு குறைய நேரிட்டது. கடன் நிலுவை அதிகரித்ததற்கு முக்கிய காரணம், கடன்களை உறுப்பினர்கள் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்துவதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்து வந்ததுதான். 1976-ஆம் ஆண்டில் 25 சதவீதக் கடன்களே தவணை தவறி நிலுவை நின்றன. தற்போது 75 சதவீதக் கடன்கள் தவணை கடந்தும் கட்டப்படாது உள்ளன.

சென்ற ஆண்டு தமிழக அரசு, கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருந்த விவசாயிகளில் 5 இலட்சம் பேர்களுக்கு, வட்டி தள்ளுபடியாக 5 கோடி ரூபாய் வழங்கியது. இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு, 52 கோடி ரூபாய் அளவிற்கு ஒன்றுக்குமேற்பட்ட கடன்களை ஒருங்கிணைத்துத் திருப்பிக் கொடுக்கும் காலத்தை நீட்டித்துக்கொடுத்தது. விவசாயிகள் குறிப்பாக, சிறு விவசாயிகள் பயன் அடையத் தக்க வகையில் கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலமுடைய சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய வறட்சி காரணமாக மாற்றப்பட்ட மத்திய காலக் கடன்களை வட்டி உட்பட, அந்த விவசாயிகளின் சார்பில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசே திருப்பிச் செலுத்த முடிவு செய்து, 42 கோடி ரூபாய் சென்ற மாதம் வழங்கி உள்ளது.

பெரிய விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயக் கடனை உழவர்களுக்கு ரிசர்வ் வங்கியிடமிருந்து 40 சதவீதம் கடனாகப் பெற்றும், உழவர்களின் டெபாசிட் மூலம் மீதமுள்ள 60 சதவீதத்தைப்பெற்றும் கூட்டுறவு அமைப்புகள் தருகின்றன. வாங்கியக் கடனைத் திருப்பித் தராவிட்டால் அடுத்த பயிர்க் கடனுக்கு நிதி தரரிசர்வ் வங்கி அதனுடைய விதிகளின்படி இயலாத நிலையில் உள்ளது. டெபாசிட் செய்த பொதுமக்களும் கூட்டுறவு அமைப்பில் டெபாசிட் செய்ய முன்வரமாட்டார்கள். மொத்தக் கடனில் சுமார் 80 சதவீதக் கடனை பெரும் விவசாயிகள் பெற்றுள்ளனர். அந்தப் பெரு விவசாயிகள் உழவர்களின் எண்ணிக்கையில் வெறும் 20 சதவீதமே உள்ளனர். ஆனால், அந்த 80 சதவீத சிறு விவசாயிகள் அடுத்த பயிர்க்கடன் பெற முடியாத நிலை, அதிகக்கடனைப் பெற்ற பெரு விவசாயிகள் கடனைத் திரும்ப தராத காரணத்தால் ஏற்படுகிறது. இதனை உணர்ந்து கிராம, பொருளாதார மேம்பாட்டில் அக்கறைகொண்டு, வாங்கிய கடனை உழவர் பெருமக்கள் குறிப்பாக பெரு விவசாயிகள் திரும்பத் தரவேண்டும். அதே நேரத்தில் எல்.டி. பாங்க் மூலம் குறைந்த செலவில் அதிக வருவாய் பெரும் பயிர்த்தொழில் உபதொழில் போன்றவற்றிற்கு அரசின் திட்டப்படி கூட்டுறவு அமைப்பு நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் பலனை உணரவும் உழவர்கள் முன்வரவேண்டும்.

இந்த ஏற்பாடுகளால் நிலைமையில் முன்னேற்றம் காண இயலும். கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்காக உள்ள அமைப்புகள், மக்களால் நடத்தப்படும் அமைப்புகள். மக்கள் கூட்டுறவுச் சங்கங்களின்பால் தம் கடமைகளை உணர்ந்து, சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளைச் செலுத்தி வந்தால், அச்சங்கங்கள் புத்துயிர் பெற்று, மேலும் சிறப்பாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும்.

[16-11-80 சென்னை வானொலி]



## கிராமிய பால்பண்ணை விரிவாக்கத் திட்டம்

தமிழ்நாடு அரசு தற்போது பால்பண்ணை மேம்பாட்டுத் துறை மூலம் கீழ்க்கண்ட காரணங்களுக்காக, பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவி யளித்து வருகிறது:

சங்கங்கள் சோதனைச் சாலையுடன் கூடிய கிடங்குகள் கட்ட, (Lab. Cum godown)

பால் கேன்கள் வாங்குவதற்கு.

பால் பரிசோதனைக் கருவிகள் வாங்க.


பால் பூத்துகள் (Milk Booth) நிறுவ.

மூன்று சக்கர வண்டிகள் வாங்க.

பால் குளிரூட்டும் உபகரணங்கள் வாங்க.

பால் பதனக் கருவிகள், பால் உபபொருட்கள் உற்பத்திக்குத் தேவையான கருவிகள் வாங்கவும் மற்றும் வெண்ணெய் பிரித்தெடுக்கும் (Cream Separator) கருவிகள் ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கவும் ரூ. 1000- முதல் ரூ 30,000- வரை கடன் வழங்கப்படுகிறது.

# ஊரகப்பகுதிகளில் வேலை வாய்ப்புகள் உருவாகிட....



கிராமப் புறங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு திட்டமிட்டு தக்க அமைப்பினை ஏற்படுத்தி பயிற்சி அளித்துச் செயல்படுத்துவதன் மூலம், கிராமப் புறங்களில் அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய நோக்கம்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அலகுகள் மூலமாகவும் கிராமக் கைவினைஞர்களுக்கு நிதி உதவியளிப்பதன் மூலம் கதர் கிராமத் தொழில்களை இவ்வாரியம் ஊக்குவித்து வருகிறது.

இவ்வாரியத்தின் கீழ் 31.3.80 வரை 3312 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. இக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டும் 1978-80-ம் ஆண்டில் ரூ. 2042.84 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.2178.43 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் 3,05,072 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளன. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 22 வகையான கிராமத் தொழில்களில், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 15 கிராமத் தொழில்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்தொழில்களில் பனைத் தொழில் முதலிடம் வகிக்கிறது. இத் தொழில் முற்றிலும் கூட்டுறவு முறையிலேயே செயல்படுகிறது. இதற்கான மாநில அளவில் ஒரு சம்மேளனமும், எட்டு மாவட்ட சம்மேளனங்களும் உள்ளன. 1597 கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன. தமிழகத்திலுள்ள 4 கோடிக்கு அதிகமான பனை மரங்களில் 2 கோடி பனை மரங்கள் பயன் தரத்தக்கவை, இவற்றில் 60 இலட்சம் மரங்கள் இக் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பயன்படுத்தி வரப்படுகின்றன. இக்கூட்டுறவு நிறுவனம் ஆண்டுதோறும் ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள நார் சம்பந்தப்பட்ட பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. ''பாம் கோலா'' என்ற இனிய குளிர் பானத்தை மாநில சம்மேளனம் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

அரசு தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையைத் திருத்தி அமைத்ததன் பயனாக அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், சட்டப்படி அமைந்த வாரியங்கள் முதலியவற்றிற்குத் தேவையான பொருட்களை வாரியத்திலிருந்தோ அல்லது அதன் நிதி உதவி பெற்ற பிரிவிடமிருந்தோ தான் வாங்க வேண்டுமென்ற ஆணையிட்டதையொட்டி, வாரியத்தின் கீழ் இயங்கும் அலகுகள் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியைப் பெருக்கிட அரசு மறுத்துவமனைகளுக்கு தேவையான ரொட்டியினை விற்பனை செய்ய ஏற்கெனவே வாரியத்தின் கீழ் இயங்கி வந்த கைக்குத்தலரிசி கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் நிதி உதவியளிக்க அவற்றின் மூலம் 11 ரொட்டி தயாரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 9 ரொட்டி தயாரிக்கும் நிலையங்கள் 1980-81ல் அமைக்கப்பட உள்ளன.

ஏற்கெனவே தமிழ்நாட்டிலுள்ள சில மருத்துவமனைகளுக்கு ரொட்டி விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது, மேலும் தமிழ்நாட்டிலுள்ள மருத்துவ மனைகட்கும் தேவையான ரொட்டி விநியோகத்தை இவ்வாரியக் குழு மேற்கொள்ளக்கூடும். அரசின் மருத்துவமனைகள், சிறைச்சாலைகள் முதலிய துறைகளுக்குத் தேவையான பருப்புவகைகள் விற்பனை செய்ய 10 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதி உதவி அளித்து செயல்முறைபடுத்தும் நிலையங்கள் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய சில விவரங்கள் பின் வருமாறு:

| | |
|---|---|
| மொத்த சங்கங்கள் | 3312 |
| உறுப்பினர் எண்ணிக்கை | 315698 |
| செலுத்தப்பட்ட பங்குத்தொகை | ரூ. இலட்சத்தில் 68.69 |
| அவற்றின் மூலதனம் | 1066.06 |

இவ்வாறு ஒவ்வொரு கிராமத் தொழிலையும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கூட்டுறவு முறையில் மேம்பாடடையச் செய்து வருகிறது.

**டாக்டர் சத்ரசால்சிங்,**
**ஐ.ஏ.எஸ்.,**
**தலைமைச் செயல் அலுவலர்,**
**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.**

## சுற்றுலா வளர்ச்சிக்கழக ஊழியர்க்கு ஊதிய உயர்வு

சுற்றுலா வாரியத்தைச் சார்ந்த 600 ஊழியர்களுக்கு 20 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது.

சுற்றுலா வாரிய ஊழியர்கட்கு அளிக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வுச் சலுகைகள் குறித்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையில் பணியாற்றும் 600-க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஊதிய உயர்வு முன்தேதியிட்டு, அதாவது கடந்த அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதலே அமலாக்கப்படும்.

இந்த ஊதிய உயர்வினால் அரசுக்கு ஆண்டுக்கு 5 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 143 பணியாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 600 பணியாளர்களுடன் இயங்கிக்கொண்டு இருப்பதோடு, இதுவே 1981 மார்ச்சு மாதவாக்கில் இரண்டு சுற்றுலா மாளிகைகள் சேர இருப்பதால், 800 பணியாளர்கள் என்ற அளவிற்கு உயரவிருக்கின்றது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பணியாளர்களின் வளர்ச்சியினையும் புறக்கணித்து விடாமல், உரிய வகையில் அவ்வப்போது அவர்களது தேவையினையும் கவனித்து வந்துள்ளது.

உணவகப் பிரிவுப் பணியாளருக்கு ரூ. 45/- ஒவ்வொரு மாதமும் அகவிலைப்படி வழங்கப்படும். இந்த உயர்வு போக்குவரத்துப் பிரிவுப் பணியாளர்களுக்கும் கிடைக்கும் வகையில் விரிவாக்கப்பட்டு உள்ளது.

நாள் ஊதியத்தில் வேலை பார்ப்போருக்கும், நாள் ஊதியம் (Daily Wage) ரூ. 6 லிருந்து ரூ. 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

உதகமண்டலம், ஏர்க்காடு, கொடைக்கானல் போன்ற மலை நகரங்களில் பணிபுரியும் உணவகப் பிரிவுப் பணியாளர்களுக்கு ரூ. 25 மலை அகவிலைப்படி மாதந்தோறும் இக்குழுவின் பரிந்துரைப்படி வழங்கப்படும்.

இதற்கென ஆண்டுதோறும் ரூ. 0.35 இலட்சம் செலவாகும்.

இதுவரை உணவகப் பிரிவில் மொத்த உபரி வருமானத்தில் 3 சதவீதமும், போக்குவரத்துப் பிரிவில் 1 சதவீதமும் ஊக்க ஊதியமாகக் கொடுத்து வரப்பட்டது. இவை முறையே 4 சதவீதமும், 2 சதவீதமும் ஆக முறையே உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கூடுதலாக ரூ. 1.25 இலட்சம் செலவாகும்.

உணவகப் பணியாளர்களுக்கு இனி அரசு மருத்துவமனைகளின் மூலம், உள்ளிருப்புச் சிகிச்சை உட்பட, மருத்துவ வசதி அளிக்கப்படும்.

உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, மாமல்லபுரம், திருச்சி முதலிய இடங்களில் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஒகனேக்கல், ஏர்க்காடு ஆகிய இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கால முறைப்படி மாவட்டங்களில் உள்ள பணியாளர்களுக்கும் வீட்டு வசதி அளிக்கப்படும். மலைகளில் இருப்போருக்கும், பெருவழி விடுதிகளில் பணிபுரிவோருக்கும் முன்னுரிமையில் இவ்வசதி விரிவுப்படுத்தப்படும்.


விழாக் கால முன் பணம் ரூ. 300லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பணிக்காலத்தில் உயிர் துறக்கும் பணியாளர் குடும்பத்தினர் ரூ. 10 ஆயிரம் பெறும் வகையில், ஈட்டுறுதிக் குழுத் திட்டமொன்று 1.4.78 முதல் அமல்படுத்தப்பட்டது. இதன் முழுத்தவணைக் கட்டணத்தையும் சுற்றுலா வளர்ச்சிக் கழகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழரசு
சந்தா விவரம்
ஓர் ஆண்டு ரூ.12
அரை ஆண்டு ரூ.6

# சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு விழா





தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களின் 58வது நினைவு நாள் சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 13.11.80ல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு சிறுசேமிப்புத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.

திரு லட்சப்பா குழுவினரின் நாதசுர இசையுடன் விழா தொடக்கமாகியது. மதுரைதமிழ் நாடுநாடகநடிகர்சங்கத்தலைவர் திரு எம்.ஏ. மஜித் அவர்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் பாடலைப் பாடினார். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தமிழ்ச் சமுதாயத்தில் மாபெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் சங்கரதாஸ் சுவாமி அவர்கள். 1867ஆம் ஆண்டு தூத்துக்குடியில் பிறந்து 1922ல் மறைவு எய்திய சுவாமிகள் நாடகத்துறையில் நுழைந்ததற்கு முன்னர் தமிழ் நாடகம் அவ்வளவாகச் சிறப்படையவில்லை. சாமிகள் அடியெடுத்து வைத்த பின்னர்தான் நாடகத் துறையில் பல நடிக மணிகள் உருவாகினர். காலஞ்சென்ற எஸ்.ஜி. கிட்டப்பா - மதுரை மாரியப்பசாமி போன்ற மேதைகளை உருவாக்கியவர் சாமிகள்.

''நடிப்பவர்களின் பெருமையை அவர் உயர்த்தினார். நடிகர்கள் மனித சமுதாயத்தில் மதிப்பாக இடம் பெற வேண்டும் என்று கருதி அதற்குரிய நியதிகளை வரைந்து கொடுத்தார். இன்று கலை உலகத்தினர்க்கு- நடிகர்களுக்கு எங்கெல்லாம் வரவேற்புக் கிடைக்கிறதோ அதற்கு வழி வகுத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார்.

விழாவில் தொடக்க உரையாற்றிய மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்:

''சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களுக்கு மூன்று சிறப்பு உண்டு. அவர் நடிகராக நாடகத்தில் நடித்தார்; நாடகங்களை யாத்தார்; நல்ல இசை வல்லுநராகத் திகழ்ந்தார்.

''அறிஞர் அண்ணா அவர்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவின்போது குறிப்பிட்டதை நினைவு கூர்தல் வேண்டும். 'தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் மிக முக்கியமானவர் சங்கரதாஸ் சுவாமிகள். அவரது வாழ்வு நாடகத்தோடு ஒன்றி வளர்ந்திருக்கிறது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''சுவாமிகளுக்குச் சங்க இலக்கியத்தில் மிகுந்த புலமை உண்டு; பக்தி இலக்கியத்திலும் பிரபந்த இலக்கியத்திலும் பயிற்சி உண்டு. அவைகளை எல்லாம் ஆழக்கற்றுத் தமது நாடகங்களில் அந்தக் கருத்துக்களை இடம் பெறச் செய்த தனித்திறன் அவருக்கு உண்டு.

''எவருடனும் கருத்து மாறுபாடு ஏற்பட்டால் அவர்களைத் தூற்றாமல் அவர்களிடமிருந்து தூர விலகிச்சென்று தமது பணியையாற்றி வந்தார் சுவாமிகள்.

''நாடகக் கலைஞர்களிடத்தில் ஒழுக்கம் வளரவேண்டுமென்று பாடுபட்டார். தாமே அதற்கு உதாரணமாகவும் விளங்கினார். தனி மனிதனைப் பொறுத்துத்தான் ஒரு சமுதாயத்தின் நல்வாழ்வு இருக்கிறது என்பதை அவர் நிரூபித்தார்.''

அடுத்து, சிறு சேமிப்புத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு எஸ்.எஸ்.ராஜேந்

நிகழ்ச்சி தொகுப்பு

**தமிழ்ப்பித்தன்**







'சதி அனுசூயா' நாடகத்திலிருந்து

திரன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''சுவாமிகளுக்கும் அண்ணாவுக்கும் ஒரு பொருத்தம் இருக்கிறது. எனது ஆசான் முத்தமிழ்க் கலாவித்வ ரத்ன டி. கே. சண்முகம் அவர்களுக்காக ஒரே இரவில் அபிமன்யு-சுந்தரி என்னும் நாடகத்தை சுவாமிகள் எழுதினார்கள். நடிப்பிசைப் புலவர் அண்ணன் கே.ஆர். ராமசாமி அவர்களுக்காக ஒரே இரவில் ஓர் இரவு என்னும் நாடகத்தை உருவாக்கித் தந்தார் அண்ணா அவர்கள்.

''எட்டைய புரத்தில் ஒரு முறை நாடகம் நடைபெற்ற பொழுது - கலைஞர்கள் அனைவரும் சமஸ்தான மன்னரைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். ஆனால் சுவாமிகள் செல்லவில்லை. சுவாமிகள் வராததைப் பார்த்த மன்னர் 'சுவாமிகளை எங்கே' என்று கேட்க,''அவர் வரவில்லை! அங்கேயே இருக்கிறார்'' என்று பதில் சொல்ல, உடனே ஜமீன்தார், ''ஆமாம்! அவர் இங்கு வராதது நியாயம்தான். அவரா வந்து என்னைப் பார்ப்பது! நான் தான் அவரைப் பார்க்கப்போக வேண்டும்'' என்று சொன்னாராம். அந்த அளவுக்கு சுயமரியாதை உள்ளவர் சுவாமிகள். நாடக உலகத்தில் சுயமரியாதை உணர்வு வளர்வதற்கு அவர் பாடுபட்டார்.''

அடுத்து உரையாற்றிய சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் குறிப்பிட்டார்கள்:

''55 ஆண்டுகள் வாழ்ந்த சுவாமிகள் 60க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றில் 47 நாடகங்களே கிடைத்துள்ளன.

''அவர் வழக்கத்திற்குச் சற்று மாறுபட்டே பாடல்களை எழுதி வந்தார். யார் பாடல் எழுதினாலும், பாட்டில், தமது பெயரையும் இணைத்துக்கொள்வது வழக்கமாக இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், தமது பெயரைப் பாடலில் சேர்க்காமல் எழுதி வந்தார் சுவாமிகள்.

''அவர் வாழ்ந்த காலத்தில், மனிதர்களைப் பாடியிருந்தால் ஏராளமான பொன்னும் பொருளும் அவருக்குக் கிடைத்திருக்கும்: ஆனால் அவர் தெய்வங்களையே பாடலில் எழுதிவந்தார். அவரது நாடகம் பெரும்பான்மை பாடல்-சிறுபான்மை வசனம் என விளங்கியது.

''எமன், சனி, இராவணன், இரணியன் போன்ற வேடங்களை எல்லாம் ஏற்று நடித்தவர் அவர்; பார்ப்போருக்கு அச்சத்தைத் தரும் வகையில் அவரது வேடமும் நடிப்பும் இருந்தது. அதனால் பல விபரீதங்கள் நடந்ததுண்டு, அதன் காரணமாக வேடம் அணிவதை நிறுத்திவிட்டார்''

அடுத்து உரையாற்றிய நடிகர் திரு கே.ஏ. தங்கவேலு குறிப்பிட்டார்:

''சங்கரதாஸ் சுவாமிகளை நான் பார்த்ததே கிடையாது; ஏன்னா அவர் இறந்த வருஷத்திலேதான் நான் பொறந்தேன்; ஆனா அவரைப் பத்தி நெறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கே பேசுன எல்லாரும் சொன்னாங்க அவர் ஒரு மேதைன்னு!. அதில ஆட்சேபணையே இல்லை.

''நாடகத்தை கூத்துன்னு சொல்லி வந்தாங்க.. அதுவும் தெருக்கூத்துன்னு சொன்னாங்க: நான் தெருக் கூத்துலதான் மொதல்லே இறங்கினேன். ஏன் நாடகத்தை தெருவிலே ஆடினாங்கன்னா.. தெருதான் விசாலமானது.. அதுனாலதான்! அப்ப எல்லாம் தெருவிலே கட்டை வண்டி - மாட்டுவண்டி தான் வரும்.. கார், மோட்டார், எக்ஸ்பிரஸ் இதெல்லாம் கெடையாது! அப்படி தெருவிலே நடந்த கூத்துக்கு தனி மரியாதையை ஏஸ்படுத்தி கொடுத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள்!

''அவருகிட்டெ ஒரு அருமையான குணம் இருந்துதுன்னு பெரியவங்க சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். பாட்டு, வசனம் எழுதறதுக்குப் பேனாவை புடிச்சாருன்னா அப்படியே ஊத்துப்போல எழுத்து ஓடிவரும். திருத்தி, அடிச்சு எழுதுற வழக்கமே அவரு கிட்டெ கெடையாது''

அடுத்து, இயல் இசை நாடக மன்றத்தின் செயலர் திரு டி. வி நாராயணசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றும்போது குறிப்பிட்டார்:

''சுவாமிகள் மனித குல அபிமானியாகத் திகழ்ந்தார்கள்; அவர்களது நினைவுநாளை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகிறது.''


பின்னர், மதுரை தமிழ்நாடு நாடக நடிகர் சங்க உறுப்பினர்கள் பங்கேற்ற -சுவாமிகள் இயற்றிய 'சதி அனுசூயா' நாடகம் நடைபெற்றது.

செம்மையான இசைப்பாடல்களும் சீர்மை மிக்க உரையாடல்களும் கொண்ட இந்த நாடகம் பார்ப்போரைப் பரவசப்படுத்தியதுடன் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாடகம் கட்டுக்கோப்புடன் அமைக்கப் பெற்றிருந்தது என்பதை எடுத்துக்காட்ட உதவிற்று; மொத்தத்தில் சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவுநாள் விழா முத்தமிழ்க் கலைக்கு எடுக்கப்பட்ட திருவிழாவாகவே தோன்றியது.


# இம்ப்காப்ஸ்

மாமூலன்












இந்தியாவில் ஆயுர்வேத, சித்த யுனானி மருந்துகளைக் கூட்டுறவு முறையில் தயாரிப்பதில் புகழ் பெற்று விளங்கும் அமைப்பாகத் திகழ்கிறது, சென்னை அடையாறு பகுதியில் அமைந்துள்ள இந்திய மருந்துகள் தயாரிக்கும் தொழிலகம்.




'தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்' என்ற பெயருடைய இந்த நிறுவனம் 'இம்ப்காப்ஸ்' என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

சென்னை இந்திய மருத்துவக் கல்லூரியின் ஒய்வுபெற்ற முதல்வர் காப்டன் ஜி.சீனிவாச மூர்த்தி அவர்களின் பெரும் முயற்சியால் அவரின் தலைமையில் கூட்டுறவு அமைப்பாக இந்த நிறுவனம் 1944ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மருத்துவர்கள் இலவசமாக மருத்துவ உதவி அளித்து வரும் தொண்டு நிறுவனங்கள் முதலியன பயன் படுத்த தூய்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளைத் தயாரிக்கும் நோக்குடன் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது.

இன்று, 'இம்ப்காப்ஸ்' தயாரிக்கும் மருந்துகளுக்கு இந்தியா முழுவதிலும் நல்ல விற்பனை வாய்ப்பு உள்ளது. குறிப்பாக, தமிழ்நாடு, ஆந்திர மாநிலம்,







கேரள மாநிலம், கருநாடக மாநிலம் ஆகிய இடங்களில் அதிகமாக விற்பனையாகின்றன.

இங்கு தயாராகும் மருந்துகளை ஸ்ரீலங்கா, மலேசியா போன்ற நாடுகளில் உள்ள மருத்வர்களும் பயன்படுத்துகின்றனர்.

'இம்காப்ஸில்' ஏறத்தாழ எழுநூறு வகையான மருந்துகள் ஆயுர்வேத, சித்த யுனானி முறைகளில் தயாராகின்றன. ஆண்டுக்கு எண்பது லட்சம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தில் இந்திய மருத்துவமான ஆயுர்வேத, சித்த, யுனானி, மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் யாரும் உறுப்பினர் ஆகலாம். அலோபதி, மருத்துவர்கூட இந்திய மருத்துவத்தில் ஈடுபாடு கொண்டிருந்தால் இக்கூட்டுறவு நிறுவனத்தில் சேரலாம்.

'இம்காப்ஸ்' வளர்ந்து கொண்டு வருவதால், மருந்துகளின் தரத்தையும் தூய்மையையும் பராமரிக்க மருந்துகளைத் தயாரிக்கும் முறைகளிலும் 'பாக்கிங்' முறைகளிலும் புதிய நவீன முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதனால் மிகமிக நவீன முறையில் மருந்துகளை உற்பத்தி செய்யும் ஒருசில நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகத் தான் திகழ்கிறது.

தகுதியும் அனுபவமும் மிக்க மருத்துவர்களின் மேற்பார்வையில் இங்கு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

தன்வந்திரி தைலம் போன்ற மருந்துகள் தயாரிக்க 101 நாட்கள் ஆகின்றன. இங்கு தயாரிக்கும் மருந்துகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பும் உள்ளது. குறிப்பாக மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் இந்திய மருந்துகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஆனால் ஏற்றுமதி முறையில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இம்மருந்துகளை ஏற்றுமதி செய்வதில் ஆர்வம் காட்ட முடியவில்லை. மேலும் உள்நாட்டுத் தேவைக்கு ஏற்ற அளவு மருந்துகளைத் தயாரிப்பதிலும் இடர்ப்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக மான் கொம்பு, கஸ்தூரி, புனுகு போன்ற பொருள்கள் கிடைப்பது கடினமாக உள்ளது. இக்குறைகளை நீக்க அரசின் உதவியுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் இந்நிறுவனம் எதிர்காலத்தில் தனது மருந்து தயாரிப்புகளை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளது.

சென்னையில் உள்ள 'இம்ப்காப்ஸ்' நிறுவனத் தயாரிப்பான இந்திய மருந்துகளின் விற்பனைக் கூடங்கள், சென்னை, மதுரை, விஜயவாடா, ஹைதராபாத், விசாகபட்டினம், பெங்களூர் ஆகிய இடங்களில் உள்ளன. ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் தாதபள்ளியில் வட்டார அலுவலகம் ஒன்று அமைந்துள்ளது.

இந்திய மருந்துகள் தயாரிக்கும் இந்நிறுவனத்தின் ஆய்வகம் மிகவும் சிறப்பான ஒன்றாகும். தரமானவைகளா என்று மூலப் பொருட்களை நன்கு சோதனை செய்த பின்னரே இங்கு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.


தலையில் தேய்த்துக் கொள்ளும் தைலம் தயாரிப்பதற்கு சுத்தமான பசும்பால் தேவைப்படுகிறது. ஆகவே, இங்கு ஐம்பது பசுமாடுகள் வளர்க்கிறார்கள். இப்படி ஒவ்வொரு மூலப்பொருளும் தூய்மையானதாக அமைந்திருக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.


இந்நிறுவனத்தின் செயலாளர் டாக்டர் வைத்தியநாதன் அவர்கள் புதியதாக இத்தொழிற்கூடம் விரிவாக்கம் செய்யப்படவிருப்பதை விளக்கினார். இதனால் இத் தொழிற்சாலையின் உற்பத்திகள் பெருகும் வாய்ப்புகள் நன்கு தெரிகின்றன.

தந்தவன சூரணம், கும் குமடிலிபம், நீலி பிருங்காதி வைலம், ஸ்வனப் பிரசன லேகியம், குஷ்மந்த லேகியம், நார்த்தை லேகியம், மாதுளை மனப்பாகு, தேத்தான் கொட்டை லேகியம், முபாரி அகமடி, தவா-உல்-மேட ஹேர் ஆயில், லபூபி கபீர் முதலியன இங்கு தயாரிக்கப்படும் மருந்துகளில் குறிப்பிடத்தக்கன ஆகும். இப்பொழுது சென்னை தொழிலகத்தில் மட்டும் 200 பேர் பணியாற்றுகின்றனர்.

ஆல் போல் தழைத்து வளர்ந்துள்ள இந்நிறுவனம் இந்தியக் கூட்டுறவு இயக்க வரலாற்றில் சிறந்து விளங்கும் அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இப்பெருமையுடன் இது மேலும் பெருகி வளர நாமும் வாழ்த்துவோம்.







# நேரு பிறந்த தின விழா

"உலக சமாதானம் விழைந்தோன்-வெண் புறாவாய் உலகெல்லாம் பறந்தோன்
உலகம் உள்ளவரை நேரு புகழை முழங்கும் உலக வரலாறு!

நேருவின் பூதஉடல் மறைந்தாலும் அவருடைய புகழ் உடல் நம்மோடுதான் அழியாது நிற்கின்றது.

ஆம்!

உலகம் போற்றும் மாமனிதராய், மனிதருள் மாணிக்கமாக ஒளிவீசிய பெருமகனாக விளங்கினார் இந்தியாவின் முதல் பிரதமர் நேரு.

நேருவின் 92வது நாள் பிறந்த தினவிழாவை தமிழக அரசு சீரோடும் சிறப்போடும் கொண்டாடியது. சென்னை நகரில் நவம்பர் 13, 14, 15 மூன்று நாட்களை நேரு பிறந்த நாள் விழாவாக தமிழக அரசு நடத்தியது.

முதல் நாள் (13.11.80)அன்று சென்னை கலைவாணர் அரங்கில் விழா துவங்கியது. விழாவுக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எம்.எஸ் கோபால் அவர்கள் தலைமை வகித்தார். அனைவரையும் தமிழ்நாடு திரைப்படக் கழகத் தலைவர் திரு என். கண்ணன் வரவேற்றார்.

விழாவைத் துவக்கி வைத்த மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில்,

தொகுப்பு:

**ஜி. ஆனந்தன்**

"எனக்குப் பிறகு எனது வாரிசு நேரு என்று அண்ணல் காந்தி, நேரு உயிருடன் இருந்தபோதே தெரிவித்தார். அப்படிப்பட்ட பேரும் புகழும் பெற்றவர் நேரு. செல்வக்குடியில் பிறந்தவர் நேரு என்றாலும் அவரது வாழ்நாள் முழுவதும் ஏழை-எளிய மக்களின் நல்வாழ்வுக்காகவே பாடுபட்டு வந்தார்'' என்று குறிப்பிட்டார்.

சென்னை திரைப்படக் கழகமும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையும் ஏற்பாடு செய்திருந்த குழந்தைகளுக்கான திரைப்படக் காட்சி நடைபெற்றது. ஏராளமான பள்ளி மாணவ -மாணவிகள் விழாவில் குதூகலத்துடன் கலந்து கொண்டனர்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு. வி.டி.வீரப்பன் அவர்கள் நன்றினார்.

அன்று மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேரு பிறந்த தினத்தையொட்டி கல்வித்துறையின் சார்பில் மாணவர் - மாணவியர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவுக்குத் கல்வித் துறை துணைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாளி தலைமை வகித்தார்.

கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதிசீனிவாசன் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகை




யில், 'நேருவின் பிறந்தநாளை நாம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடி வருகிறோம். இத்தகைய விழாக்கள் நல்லெண்ணத்தையும் நல்லொழுக்கத்தையும் பதிய வைக்கும்.

"குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற நேருவின் கனவுகளை முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கருத்தில் கொண்டு செயலாற்றி வருகிறார்'' என்று குறிப்பிட்டார்.

மாணவ - மாணவிகளுக்காக நடந்த கட்டுரைப் போட்டி-பேச்சுப்போட்டி-ஓவியப் போட்டி கவிதைப் போட்டி மற்றும் பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குமாண்புமிகு அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் பரிசுகளை வழங்கினார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார். அனைவரையும் முதன்மைக் கல்வித்துறை அலுவலர் திரு கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். தென் சென்னை மாவட்ட கல்வித் துறை அலுவலர் திரு பி. எம். சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

பண்டித நேருவின் பிறந்த நாளான 14.11.80 அன்று மாலை சேத்துப்பட்டு ஸ்பர்டாங் சாலை பல்கலைக் கழக விளையாட்டு அரங்கத்தின் குழந்தைகளின் கண்கவர் அணிவகுப்பு நடைபெற்றது. விழாவைத் தமிழக காவல்துறைத் தலைவர் (சட்டம்













ஒழுங்கு) திரு பொன். பரமகுரு தொடங்கி வைத்தார். விழாவுக்குத் தமிழகப் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியம்தலைமை வகித்தார்.

அன்று மாலை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவுக்கு சமூகநலத்துறை இயக்குநர் ஓ.எஸ். சூசம்மா தலைமை வகித்தார். மாண்புமிகு பெருந்தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கினார். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் சீருடை வழங்கினார். சமூகநல வாரிய உறுப்பினர் திருமதி ராஜம்மாள் தேவதாஸ் வரவேற்றார்.

ராஜாஜி மண்டபத்தில் நூலகத் துறை ஏற்பாடு செய்திருந்த சிறுவர்களுக்கான ஓவியம்-மற்றும் புத்தகங்கள் கண்காட்சியை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார். விழாவுக்கு நூலகத்துறை இயக்குநர் திரு தில்லை நாயகம் அவர்கள் தலைமை வகித்தார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எம்.எஸ். கோபால் அவர்கள் விழாவில் பங்கேற்றார்.

மூன்று நாட்களும் எழுச்சியோடு நடைபெற்ற நேருவின் பிறந்தநாள் விழா -நெஞ்சத்தில் நிறைந்த விழாவாக மலர்ந்தது என்றால் அது மிகையாகாது!



# இதோ ஒரு புதுமுகம்


—சி. நாகராஜன்,
இணைப் பேராசிரியர்,
பயிரியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

சோளத்திற்கு அடுத்தபடியாக, கம்பு முக்கிய சிறுதானியப் பயிராகும். கம்பு சுமார் 11 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்படுகிறது. இதில் 75 சதம் மானாவாரியில் பயிர் செய்யப்படுகிறது. திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் இது அதிகமாகப் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் பயிரிட, தற்போது கே.எம். 1 கே.எம். 2 என்ற இரண்டு வீரிய கலப்பின ரகங்கள் உள்ளன. சமீபத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் எக்ஸ் 4 என்ற புதிய வீரிய கம்பு ரகம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தக் கலப்பின் ரகத்தின் தாய் ரகமானது எம்.எஸ். 5141ஏ, இதுவே கே.எம்.1, கே.எம். 2 கலப்பின ரகங்களுக்கும் தாய் ரகம். ஆனால், மகரந்த ரகம் மாறுபட்டது. கே.எம். 1, கே.எம். 2 ரகங்களுக்கு முறையே ஜாம்நகர், கான்பூர் ரகங்கள் மகரந்த ரகங்களாகும். ஆனால், எக்ஸ் 4 கம்பின் மகரந்த ரகங்கள் பி.டி. 1921 என்ற ஆப்பிரிக்க ரகத் தேர்வாகும். ஆதலால் எக்ஸ் 4 ஒரு வேறுபட்ட மகரந்த இணைப்ட கொண்ட கலப்பினமாகும்.

வெவ்வேறுபட்ட வீரிய கம்பு ரகங்கள் பயிரிடப்படுவதால் தீவிர நோய் ஏற்படும் காலத்தில் கம்புப் பயிர் மொத்தமாக அழியாமல் காக்க முடியும். எக்ஸ் 4 கம்பானது கே.எம்.1, கே.எம். 2, பயிர்களைப் போலவே 85 நாட்களில் பயிராகி அதிக மகசூல் கொடுக்கும் தன்மையுடன் பசுங்கதிர் நோயையும் வெகுவாகத் தாங்கவல்லது. இந்த ரகம் சராசரியாக இறைவையில் ஏக்கருக்கு 1000 முதல் 1,200 கிலோ தானியமும், மானாவாரியில் ஏக்கருக்கு 400 முதல் 600 கிலோவும் கொடுக்கவல்லது. தவிர, இந்த ரகம் பலதரப்பட்ட சூழ்நிலைகளிலும் நல்ல பலன் கொடுத்துள்ளது. நீண்ட கதிர்களும் பெருத்த தானியங்களும் உடையது.

இதை எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். எனினும், இறைவையில் மாசி - பங்குனி, ஆனி-ஆடி மாதங்களில் விதைத்தால் அதிக மகசூல் பெறலாம். மானாவாரியில் பயிரிடும் இடங்களில் பருவமழைக்கு ஏற்றபடி ஆடிப்பட்டம் அல்லது புரட்டாசி ஐப்பசி பட்டத்தில் விதைக்கலாம்.



விதைகளை ஒரு கிலோவுக்கு இரண்டு கிராம் அக்ரசான் அல்லது திராம் மருந்தைக் கலந்து விதைத்தால் விதைகளின் மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். நன்றாக உழுது பண்படுத்திய நிலத்தில் கடைசி உழவின்போது ஏக்கருக்கு 10 டன் அல்லது 20 வண்டி தொழு உரம் போட்டு நிரவி மண்ணோடு நன்றாகக் கலந்துவிட வேண்டும். பிறகு 1½ அடி இடைவெளிவிட்டு பார்கள் பிடிக்க வேண்டும். நீர்ப்பாசன வசதிக்குத் தக்கபடி பாரின் நீளங்களை அமைத்துக் கொள்ளலாம்.

பாரின் ஒரு பக்கத்தில் தரையை ஒட்டி அகலம் குறைந்த களைக் கொத்தால் சிறு சால் செய்து கொள்ள வேண்டும். இதில் ஒரு ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து கொடுக்க வேண்டும். இதற்கு 45 கிலோ யூரியா, 160 கிலோ சூப்பர்பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவை தேவை. இந்த உரங்களை நன்றாகக் கலக்கி ஒரே சீராகப் போட வேண்டும். பிறகு நிலத்தைக் கிளறி விட்டு அதே பாரிலே தொடர்ச்சியாக ஒரு இடத்தில் இரண்டு அல்லது மூன்று விதைகள் விழும்படி விதைத்து மூட வேண்டும். உடனே தண்ணீர் கட்ட வேண்டும். விதைத்த மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும்.

பார்கள் பிடிக்க வசதி இல்லை என்றால், நன்றாகப் பண்படுத்தின நிலத்தில் கம்பு விதையைத் தெளிக்கலாம். அல்லது வரிசையில் விதைக்கலாம். பிறகு பாத்திகள் பிடித்து பயிர் செய்யலாம். ஆனால், ப ர்களில் வரிசையாக விதைத்தால் களை எடுப்பது, உர

— தொடர்ச்சி 24-ஆம் பக்கம்

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித்தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

# மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

# மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் போடிநாயக்கனூர், பெரியகுளம், திண்டுக்கல், பழனி, நிலக்கோட்டை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்க வேண்டுமென்ற உன்னதமான நோக்கத்தோடு தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்படி ஒன்றியங்களில் கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக 74 கையடிக் குழாய்களும், 95 விசை பம்புகள் நிறுவுவதற்கும் 540 இணைப்புச் சாலைகளும், அரிசன மக்கள் வாழும் பகுதிகளுக்கும் அவர்களின் மயானங்களுக்கும் செல்வதற்கு 62 பாதைகள் அமைக்கவும், 26 சிறு நீர் பாசனக் கண்மாய்களைச் சீர் திருத்தம் செய்யவும், 9 புதியப் பள்ளி கட்டடங்கள் கட்டவும், 30 தாய்சேய் நல விடுதிக் கட்டடங்கள் கட்டவும், 8 கிராம மருந்தகக் கட்டடங்கள் அமைப்பதற்கும் அரிசன மக்களுக்கு 2,000 குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும், மொத்தம் ரூ. 255 இலட்சத்திற்குத் திட்டங்கள் திட்டப்பட்டு வேலைகளுக்குரிய மதிப்பீடுகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.


மேலும், இத்திட்டத்தின் கீழ் மேற்படி வட்டாரங்களில் ஊராட்சிகளின் உபயோகத்திற்காக மூன்று ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 1,47,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏழை மக்கள் வாழும் குடிசைகளில் மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2001 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு இதுவரை 1314 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு மின் விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மேலும் 260 வயோதியர்களுக்கும் வாழ்க்கையில் கைவிடப்பட்ட 159 பெண்களுக்கும், 27 உடல் ஊனமுற்றவர்களுக்கும் ஆக மொத்தம் 446 பேர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதற்கு அரசினரால் அனுமதிக்கப்பட்டு 31-10-80க்-குள் ஓய்வூதிய ஆணைகள் பிறப்பிப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**உழைப்புக்கு உணவுத் திட்டம்:**

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் இம்



மாவட்டத்தில் உள்ள 34 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 192 இலட்சம் மதிப்பீட்டில் 2654 வேலைகள் எடுக்கப்பட்டு அவற்றில் அநேக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேற்படி வேலைகளைச் செய்வதற்கு அமர்த்தப்படும் கூலி ஆட்களுக்குக் கூலியின் ஒரு பகுதியை அரிசிவழங்குவதற்காக ரூ.150 இலட்சம் மதிப்புள்ள 10 ஆயிரம் மெ. டன் அரிசி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 2500 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரிசியைப் பயன்படுத்தி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும்

**ஆர். பூர்ணலிங்கம்** ஐ.ஏ.எஸ்.
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**மதுரை மாவட்டம்.**

ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகளின் சாலை ஓரங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் 3000 புளியங்கன்றுகள் அல்லது வேம்பு, புங்கன், இலவ மரம் ஆகிய மரங்களை நடுவதன் மூலம் மாவட்டம் முழுவதிலும் இலட்சம் மரங்கள் நடுவதற்கு எல்லா ஒன்றியங்களிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு மேற்படி வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்த ஒரு இலட்சம் மரங்களும் 31-10-80-க்குள் நட்டு முடிக்கப்பட்டுவிடும்.

**வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்:**

கிராமப்புறங்களில் உள்ள வேலை வாய்ப்பு இல்லாத பல நூற்றுக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் 11,373 பேர்கள் இம்மாவட்டம் முழுதிலும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் 11,348 நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் எடுத்துச் செய்யப்படும் வேலைகளுக்குத் தேவைப்படும் பொருட்கள் மதிப்புத் தொகையைப் பட்டுவாடாச் செய்வதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 1979-80-ல் ஒரு இலட்சமும், 80-81-ல் ஒரு இலட்சமும் ஆக மொத்தம் 68 இலட்சம் அரசு மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்புத் திட்டம்:**

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் மதுரை மாவட்டத்திற்கு நிர்ணயம் செய்துள்ள ஒதுக்கீடு ரூ. 300 இலட்சம். இதுவரை இம்மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 96 இலட்சம் நிகர வசூலாகும்.

கிராமப்புற சேமிப்புத் திட்டத்தின் கீழ் சின்னமனூர், உத்தமபாளையம், திருமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் அவனியாபுரம், நத்தம் ஆகிய பேரூராட்சிகளிலும் மேலூர், கம்பம், போடிநாயக்கனூர், சின்னமனூர் ஆகிய நகராட்சிகள் 5 ஆண்டுத்தொடர் சேமிப்பு கணக்குகள் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் 15,000 கணக்குகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் 3,000 ரெக்கரிங் டிபாசிட் கணக்குகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**குடும்ப நல்வாழ்வுத் திட்டம்:**

இம்மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறியீடு 17,500. இதுவரை ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களின் முயற்சியால் 5,800 நபர்களுக்கும் ஆரம்பச் சுகாதார நிலயங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களால் 1500 நபர்களுக்கும் ஆக மொத்தம் 7300 அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளன.

**பட்டு வளர்ப்பு:**

இம்மாவட்டத்தில் 34 ஒன்றியங்களிலும் இவ்வாண்டில் 1,610 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிட்டு பட்டு உற்பத்தியை அதிகரிப்பது என திட்டமிடப்பட்டு இதுவரை 801 மனுக்கள் பெறப்பட்டு பட்டு உற்பத்தித் துறை அலுவலரால் சம்பந்தப்பட்ட நிலங்கள் பார்வையிடப்பட்டு முசுக்கொட்டை குச்சிகள் நடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**மீன் வளர்ப்பு சிறப்புத் திட்டம்:**

மதுரை மற்றும் பெரியகுளம் கோட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் குளங்கள் அனைத்திலும் மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 7 இலட்சம் மீன் குஞ்சும் 8 ஊராட்சி ஒன்றிய குளங்களில் விடப்படும். ரூ. 55,000 மதிப்புள்ள இக்குஞ்சுகள் 6 மாதத்திற்குள் பல இலட்சம் மதிப்புள்ள மீன் கிடைக்க வழி வகை செய்யும். இத்திட்டம் மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், பேரையூர், கொட்டாம்பட்டி, நத்தம், சின்னமனூர், போடி, தேனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் முதலில் செயல்படும்.

**வறுமைக்கோட்டினர் வளர்ச்சித் திட்டம்:**

கிராமங்களில் தங்கள் குடும்ப வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான குறைந்த அளவு வருமானம்கூட இல்லாது வறுமைக் கோட்டுக்குக் கீழேயிருந்து வாடி நிற்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனித் திட்டம் வகுத்து அவர்களது வருமானத்தை அவர்கள் வாழ்க்கையை ஓரளவு செம்மையாக நடத்துவதற்குத் தேவையான குறைந்த அளவு வருமான வரம்பை எட்டச் செய்வதற்கு அத்தகைய குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் புறக்கடைக் கோழிப்பண்ணைகள் ஏற்படுத்தித் தரவும், பால்மாடுகள் வழங்கவும் முருங்கை மற்றும் பப்பாளி போன்ற செடிகள் வளர்த்து வருமானத்தை உயர்த்தவும் நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும், பத்து ஏழைக் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கான திட்டங்களை ஒன்றிய ஆணையாளர்கள், ஊர்நல அலுவலர்கள் மூலம் நிறைவேற்றுவார்கள். இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 9,500 குடும்பங்கள் பயன்பெறுவர்.

**பப்பாளி மற்றும் முருங்கை கன்றுகள் நடுதல்:**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 8 முதல் 10 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, குறிப்பாக அரிசன மக்கள் வாழும் பகுதிகளிலும் முற்றுமுள்ள இடங்களிலும் உள்ள தனியார் வீடுகளில் 6000 பப்பாளிக் கன்றுகளும் 6000 முருங்கைக் கன்றுகளும் நடுவதற்குத் திட்டம் தீட்டப்பெற்று, 40,000 பப்பாளி மற்றும் முருங்கைக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**கிராம வீடு கட்டும் திட்டம்:**

கிராம வீடு கட்டும் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் 5000 வீடுகள் கட்டி முடிக்கப்படும். இதற்காகக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் மூலம் ரூ. 1.5 கோடி கடன் வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் அரிசனங்களுக்கு ரூ. 600 மானியமாக வழங்கப்படும். இதுவரை 800 வீடுகள் முடியும் தறுவாயில் உள்ளது.

இதுவரை ரூ.15 இலட்சம் கடனாக வழங்கப் பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள் கட்டும் சிறப்புத் திட்டம்:**

மதுரை மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் சொந்த பள்ளிக் கூட கட்டடம் இல்லாத 152 பள்ளிக் கட்டடங்களுக்குச் சொந்த கட்டடம் கட்ட ரூ.45 இலட்சம் அரசு மான்யம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**வீட்டு வசதித் திட்டம்:**

மதுரை மாவட்டத்தில் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் ரேஸ் கோர்ஸ் காலனி. மொத்த குடியிருப்புகள் 22 பிளாக்குகள் (174பிளாட்ஸ்) மதிப்பீடு ரூ.93 இலட்சம் வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. 108 பிளாட்ஸ் (நடுத்தர வருமானப் பிரிவினருக்கானது) அண்ணா நகர், மதிப்பீடு ரூ. 54 இலட்சம். வேலைகள் அக்டோபரில் துவங்கப் பட உள்ளன.

**புதுத் திட்டங்கள்:**

விளாங்குடியில் ரயிலார் நகர் அருகில் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் 810 தனி வீடுகள் கட்டும் திட்டம்.

மதுரை வடக்கு நகர்புறத் திட்டத்தின் கீழ் இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தில் நில மேம்பாடுகள் குடிநீர் வசதி, சாலைகள் அமைப்பு, கழிவுநீர் பாதாளச் சாக்கடை அமைத்தல், தெரு விளக்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேம்படுத்தப் பட்ட வீட்டு மனைகள் தவணை முறையில் விற்கப்படும். சுமார் 1,500 தனி வீடுகள் அமைக்கும் திட்டம் இதில் சேருகிறது.

பசுமலையில் தொழிற்சாலைப் பணியாளர்களுக்காக ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டில் 240 குடியிருப்புகள் (டெனமென்ஸ்) கட்டும் பணி முடிவும் தறுவாயில் உள்ளது.

**திண்டுக்கல்:**

அரசு ஊழியர்களுக்கான 72 குடியிருப்புகள் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

**தேனி:**

பொருளாதாரத்தில் பலவீனப்பட்ட பிரிவினர் குறைந்த வருமானமுள்ள பிரிவினர் மற்றும் நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கான 150 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான மதிப்பீடு 23.5 இலட்சம்.

**பெரியகுளம்:**

அரசு ஊழியர்களுக்காக 60 பிளாட்டுகள் ரூ. 16 இலட்சம் செலவில் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. பணிகள் விரைவில் துவங்கவுள்ளது.



இம்மாவட்டத்தில் வருமான ஆய்வாளருக்கான .35 குடியிருப்புகள் ரூ. 8 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 25 குடியிருப்புகள் முடிவுற்று, ஏனைய குடியிருப்புகளுக்கான கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

உசிலம்பட்டி கோட்டாட்சித் தலைவர் குடியிருப்புக் கட்டுவதற்காக அரசு அனுமதியளித்துள்ளது. மதிப்பீடு ரூ. 75 ஆயிரம், விரைவில் இப்பணி துவங்கப்படும்.

மதுரை வீட்டு வசதி வாரிய சிறப்புப் பிரிவு, எல்லீஸ் நகரில் ரூ. 110 இலட்சம் மதிப்பீட்டில் 120 உயர்ரகப் பிரிவினருக்கும், 264 நடுத்தர வருமான பிரிவினருக்கான வீடுகள் கட்டும் பணி துவக்கப்பட்டிருக்கிறது.

**சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டம்:**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில், மதுரை மாவட்டத்தில் அடியிற் கண்ட நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தி, அதில் அரசு ரூ.14 இலட்சம் ஒதுக்கீடு செய்து முதல் தவணையாக ரூ.4.60 இலட்சம் பெறப் பட்டுள்ளது. இத்தொகை சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படாத கீழ்க் கண்ட நான்கு வட்டாரங்களில் ''பகுதித் திட்டங்கள்'' செயல்படுத்துவதற்காகச் செலவிடப்படும்!

| | வட்டாரம் | மான்யத் தொகை. இலட்சம். |
|---|---|---|
| 1. | மதுரை கிழக்கு | 1.30 |
| 2. | சின்னமனூர் | 1.00 |
| 3. | சேடப்பட்டி | 1.00 |
| 4. | தொப்பம்பட்டி | 1.30 |
| | மொத்தம் | 4.60 |

இத்திட்டத்தின் கீழ் விவசாயம், சிறு நீர்ப்பாசனம், பால்மாடுகள் வழங்குதல், ஆடுகள் வளர்ப்பு, கைவினைஞர்கள் கிராமத் தொழில் வளர்ச்சி ஆகிய திட்டங்களுக்காகச் செலவிடப்படும். கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகள் ரூ. 29.25 இலட்சம் கடன் வழங்கி அதனால் 6770 பேர்கள் பயனடைவார்கள்.

கிறிஸ்துமஸ்
தாத்தாவின் அன்புப் பரிசு

# தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு

குலுக்கல் நாள் 10-12-80




6 இரண்டாவது பரிசுகள்

ரூ. **10,000** வீதம்

இன்னும் ஏராளமான கவர்ச்சிமிகு பரிசுகள்!

பரிசுச் சீட்டின் விலை ரூ. **1**

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்குநர்
அரசினர் தோட்டம் சென்னை-600 002

EP/DIPR/1028/80

# செங்கை மாவட்டத்தில் செவிக்கினிய செய்தி

**வை**யத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திடும் உரிமை வசதி படைத்த செல்வச் சீமான்களுக்கு மட்டும் உரியதல்ல; வறுமைக் கோட்டுக்கீழே உள்ள ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்களும் அந்த உரிமையினைப் பெற்றாக வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு. அந்த வகையிலே உருவாக்கப்பட்ட உயர்வான திட்டங்கள்தாம்— தன்னிறைவுத்திட்டம், உழைப்புக்கு உணவுத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் ஆகியவைகளாகும்.

இத் திட்டங்களின் மூலம் தமிழகத்திலுள்ள லட்சோப லட்சம் மக்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பயன்மிகப் பெற்றுவருகிறார்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்திலே இத்திட்டங்கள் எப்படிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறித்துச் சிலரைப் பேட்டி கண்டோம். அப்போது மனநிறைவோடு அவர்கள் கூறிய செவிக்கினிய செய்திகளைத் தொகுத்தளித்திருக்கிறோம், படித்து மகிழுங்கள்—

''என் பேரு நாராயணன்... தாமல் பஞ்சாயத்தைச் சேர்ந்த பொன்னி அம்மன் பட்டறைதான் என் கிராமம்... எனக்கு வயசு பதினைந்தாகுது... அஞ்சாம் வகுப்பு வரைதான் படிச்சேன்.. அப்புறம் எங்க அப்பா கூட வேலைக்கு போக ஆரம்பிச்சிட்டேன்.. ஆனா எனக்குப் படிக்கணுமின்னு ரொம்ப ஆசை.. அதுனாலே இப்போ வேலையும் பார்த்துட்டு படிக்கவும் செய்றேன்.. எங்க கிராமத்திலே முறைசாரா கல்விக்காக தனி பள்ளிக்கூடம் கட்டிட்டு இருக்காங்க.. எங்களுக்கு அது ரொம்ப பெருமை...''

...என் பேரு நாகூரான்.. இவரு பேரு வரதன்.. நாங்க ரெண்டுபேருமே இதோ.. இந்த சிட்டலம்பாக்கம் அரிசன காலனியிலே தான் குடியிருக்கோம்.. எங்க ஊர் வந்து திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன்லே இருக்கு... இதுநாள் வரை எங்களுக்கு சாலை வசதி கிடையாது... அதாவது மயானத்துக்குப் போற சாலை. யாராவது செத்துப் போயிட்டா அவங்களைத் தூக்கிட்டுப் போயி அடக்கம் பண்றத்துக்குள்ளே எங்களுக்குப் பெரும்பாடு.. ஆனா.. இப்போ நல்லா ரோடு போட்டிருக்காங்க.....

... நான் பேரம்பாக்கம் கிராமத்து ஆளுங்க. எனக்கு வயசு அறுவது ஆகுது...ஆனாலும் இன்னும் நான் உழைச்சுதான் என்னோட அஞ்சு புள்ளைங்களும் சாப்பிடணும்..மழை தண்ணி இல்லாததுனாலே எங்கேயும் வேலையும் கிடைக்கலே.. திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன்லே வேலைக்கு கூப்பிட்டாங்க.. வந்தேன் . உழைச்சு முடிஞ்சதும் அரிசியாவே கொடுத்திடுறாங்க.. ரொம்ப நல்லதுங்க.. இல்லேன்னா பணத்தை வாங்கிட்டு அரிசி எங்கே கிடைக்குன்னு அலைய வேண்டியதில்லை.

என் பேரு உங்களுக்கு எதுக்கு.. அதெல்லாம் சொல்ல மாட்டேன்.. ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன்.. ஏதோ இந்த அரிசியை கூலியா குடுக்கலேன்னா நாங்க போன இடம் புல் முளைச்சி போயிருக்குங்க...

... என் பேரு ஏழுமலை... விவசாயமும் ஆடு மேய்க்கிறதும் என்னோட பொழைப்பு. எங்க ஊர்ல - அதுதான் - நல்லூர்லே உள்ள ஏரியை நம்பித்தான் எங்க விவசாயம்..இந்த ஏரிக்கு இதுநாள் வரை எப்பவோ கட்டின மதகு இருந்துச்சு... அதுனாலே மழைத்தண்

நாராயணன்.




நாகூரான்



வரதன்..



ஏழுமலை





பேரம்பாக்கம் உழைப்பாளி



கண்ணம்மா



பேரம்பாக்கம் உழைப்பாளி

ணீர் எல்லாம் தேங்காம வடிஞ்சிடும் -ஆனா இப்போ புதுசா மதகு கட்டிட்டாங்க.. மழை வந்துட்டா.. நிச்சயம் எங்களுக்கு நல்ல மகசூல் இருக்கும்...

என்பேரு கண்ணம்மாங்க... எங்க ஊரு இந்த லட்சுமி நாரணபுரம்.. எங்க ஊரு எதிலேயும் சேர்த்தி கிடையாது.. வேற ஊரை விட்டு ஒதுங்கி இருக்கு... எங்களுக்கு ஏதாச்சும் நோவு வந்தா செய்யூர் ஆஸ்பத்திரிக்குத்தான் போகணும்.. எங்க பொண்ணுங்க பிரசவத்திற்கும் அங்கேதான் போகணும்.. இதுக்கு முன்னாலே செய்யூர் ரோடுக்கு போறதுக்கு எங்க ஊர்லேயிருந்து ரோடே கிடையாது.. ஒரே கல்லும் கழியும் குண்டுமா ஒரு ஒத்தடித் தடம்தான் உண்டு... ஆனா இப்போ செய்யூர் ரோட்டுக்கும் எங்க ஊருக்கும் ரோடு போட்டுட்டாங்க.. வண்டிகள் கூட ஜம்முன்னு போறது.....

17: ஆம் பக்கத் தொடர்ச்சி

மிடுவது போன்றவை சீராகச் செய்யலாம். விதைகளை நாற்றங்காலில் விதைத்து 20 நாட்களில் நடவு செய்தும் பயிரிடலாம்.

விதைத்த 18-20 நாட்களில் பயிரைக் களைப்பது அவசியம். அரை அடிக்கு ஒரு பயிர் வீதம் விட்டு களைக்க வேண்டும். இரண்டு முறை களை எடுக்க வேண்டும். முதல் களை விதைத்த 20வது நாளிலும், இரண்டாவது களை 40வது நாளிலும் எடுத்தால் நல்லது. இரண்டாவது களைக்குப் பிறகு, இரண்டு நாட்கள் கழித்து, மேலுரமாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து கொடுக்க 45 கிலோ யூரியாவைச் சாலிலே இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். மண்ணின் நிலைக்கும், சீதோஷ்ண நிலைக்கும் தகுந்தபடி, 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சலாம்.

முதலில் பயிரைக் கொஞ்சம் காயவிடலாம். கதிர் வரும் சமயத்திலும் மணி பிடிக்கும் சமயத்திலும் போதுமான அளவு தண்ணீர் பாய்ச்சினால் நல்ல பயன் தரும். மணி நன்றாக முற்றியவுடன் கதிர்களை அறுவடை செய்ய வேண்டும். இது வீரிய கலப்பின ரகமானதால் இதிலிருந்து விதை எடுக்கவேகூடாது. எடுத்தால், அடுத்த பயிரில் அவற்றின் இயற்கைத் தன்மை மாறுவதோடு வீரியமும் அழிந்துவிடும்.

பயிர் பாதுகாப்பில், குருத்து ஈ, தாக்குதலைத் தடுக்க விதைக்கும்போது உழவுச் சாலில் ஒரு அடி நீளத்திற்கு $\frac{1}{2}$ கிராம்வீதம் போரேட் குருணைகளை இட வேண்டும். நாற்றுப் பருவத்தில் இப்பூச்சி தென்பட்டால், ஏக்கருக்கு 500 கிராம் 50 சத கார்பொரில் அல்லது 175 மி.லி.எண்டோசல்பான் அல்லது 100 மி.லி ரோகார் தெளிக்க வேண்டும். கதிர் ஈ தென்பட்டால், பயிர் பூக்கும் பருவத்தில் ஒரு முறையும் அதன்பின் ஏழு நாட்களில் இரண்டாவது முறையும் ஏக்கருக்கு 8 கிலோ செவின், 10 சதம் தூள் தூவ வேண்டும். அல்ல எண்டோசல்பான் ஏக்கருக்கு 0 மி.லி தெளிக்க வேண்டும்.

இலைகளில் தாக்கப்படும் கீழ்ச் சாம்பல் நோய்தான் பின்னர் பசுங்கதிர் நோய் ஆகிறது. 4 ரகம் இந்நோயை ஓரளவு எதிர்க்கும் திறனுடையது. இந்நோய் தோன்றும் அறிகுறிகள் இருந்தால், பாதிக்கப்பட்ட பயிரை வேருடன் பிடுங்கி எறிந்து விடவேண்டும். பிறகு ஏக்கருக்கு 500 கிராம் ஜினப் அல்லது 400 கிராம் டைத்தேன் எம். 45 மருநதை நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்நோயுள்ள செடிகளை மாட்டுத் தீவனமாக உபயோகித்தால், தொழு உரம் மூலம் நோய் பரவக்கூடும்.

எர்கட்டை என்ற தேன் ஒழுகல் நோயை மருந்து மூலம் கட்டுப்படுத்த முடியாது. பாதிக்கப்பட்ட தானியங்களை 20 சதம் உப்புக் கரைசலில் போட்டு மிதிக்கும் எர்கட்டை அப்புறப்படுத்தி அடியிலுள்ள நல்ல மணிகளையே உபயோகிக்க வேண்டும். இந்நோய் பூச்சிகளால் பரப்பப்படுவதால், ஏக்கருக்கு 500 கிராம் செவின் 50 சதம் மருந்தைத் தெளித்து ஓரளவுக்கு நோய் பரவாமல் தடுக்கலாம். மழை பனிக் காலங்களில் பயிர் பூவுக்கு வராதவாறு விதைப்பு எடுத்துக் கொண்டால் இந்த நோய் வராமல் தடுக்கலாம்.

இலைப்புள்ளி நோய்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 500 கிராம் ஜினப் மருந்தைத்தெளிக்க வேண்டும்.

நல்ல பலன் தரக்கூடிய எக்ஸ் 4 கம்பு பயிரிட மேற்கூறிய சீரிய முறைகளைக் கையாள்வதால், முழுப்பயன் பெறலாம்.



# சிந்தனையூட்டும் சிவகங்கைத் திட்டம்

இன்றைய சேமிப்பு நாளைய நல்வாழ்வு' என்னும் கருத்தை ஒவ்வொரு குடும்பமும் உணர்ந்து சிறுசேமிப்பு இயக்கத்தில் ஈடுபட்டால் நாடு நலம் பெறும்; வீடு வளம்பெறும். சிறுகச் சிறுகச் சேமித்து சீரான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நாம் முன்வருதல் வேண்டும். அதன் விளைவாக உருவானதே, சிவகங்கைத் திட்டம்.

சிவகங்கை சிறுநகரம் தொழில் வளம் மிக்க நகரமோ, வியாபாரம் பெருகிய நகரமோ அல்ல. அந்தந்த மாதத்தைக் கடத்துவதேபெரிது என்று எண்ணக்கூடியவர்களின் எண்ணிக்கை 95 சதவீதத்திற்கு மேலாகும். இதுதான் இன்றைய சிவகங்கை பகுதி மக்களின் பொருளாதார நிலைமை. எதிர்காலச் சந்ததியினருக்குச் சேமித்துவைக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களிடம் உண்டு, ஆனால் செயல்படுத்த இயலவில்லை.

அணுகுமுறை சீராக இருப்பின் எப்படியாவது வீட்டிற்கு ஒரு ஐந்து ரூபாய் அஞ்சலகத் தொடர் சேமிப்புக் கணக்கு துவக்கஞ்செய்து ஐந்தாண்டுகால முடிவில் ரூ. 389.00 கிடைக்கச் செய்ய முடியுமே என்ற எண்ணத்தில்தான் 'சிந்தனையூட்டும் சிவகங்கைத் திட்டம்' பிறந்தது.

வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு, சிவகங்கை நகரம் 20 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், வளர்ச்சிப் பணியாளர்கள்; ஊர்நல அலுவலர்கள், ஆசிரியர்கள். ஆசிரியைகள், மகளிர் மன்றத்தினர், நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் பலர் சேர்ந்த அமைப்புக்களைக் கொண்டு வார்டுக்கு 15 நபர் வீதம் வீடு வீடாகச் சென்று தொடர்பு கொண்டனர். சிறுசேமிப்புப் பற்றிய திரைப்படம், வானொலி மூலம் அறிவிப்பு, துண்டு வெளியீடுகள் விளம்பரத் தட்டிகள் போன்றவைகள் மக்களிடையே விழிப்புணர்வு உண்டாவதற்கு வழிவகுத்தன.


**பா. துரைராஜ்**

கோட்ட வளர்ச்சி அலுவலர்,
சிவகங்கை.


அஞ்சலகக் கணக்குகள் துவக்குவதற்கான பாரங்கள், பாஸ் புத்தகங்கள் முதலியன முன்னேற்பாடாகச் சேர்த்து வைப்பதற்கு இராமநாதபுரம் அஞ்சலகக் கண்காணிப்பாளர், சேமிப்பு வளர்ச்சி அலுவலர் ,தேசிய சேமிப்பு நிறுவன உதவி இயக்குநர் போன்றோர்களின் ஆர்வம் பேருதவியாக இருந்தது.

20 குழுக்களாகப் பிரித்து திட்டமிட்டு 3 தினங்களாக ஆற்றிய பணி மக்களின் கவனத்தை ஈர்த்தது. முதலில் மறுத்தவர்களும், பின்னர் பார்த்துக் கொள்ளலாமென்று காலம் கடத்த நினைத்தவர்களும் கூட ''இன்றுபோய் நாளை வா'' என்று கூறியவர்களும்கூட 'என் பெயரில் கணக்குத் துவக்குங்கள், எங்கள் குழந்தைகள் பெயரிலும் கணக்குத் துவக்குங்கள்' என்று வலியகூறும் அளவிற்குத் தங்களது மனதை மாற்றிக் கொண்டு இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள தாமே முன்வந்தது திட்டத்திற்கான வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது.

2.8.80ம் தேதி முதல் சிவகங்கையில் துவக்கப்பட்ட இயக்கம் 3 தினங்களில் நிறைவு பெற்றது. 4340 குடும்பங்களில் 4380 கணக்குகள் துவக்கப்பட்டன. ரூ. 35,040,00 சேமிப்புத் தொகை முதல் மாத தவணையாகச் செலுத்தப்பட்டது.

''சிந்தனையூட்டும் சிவகங்கைத் திட்டம்'' இளையான்குடிக்கும் பரவியது. இளையான்குடி நகரம் இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்குப் பெயர் பெற்ற இடம். கோவிலும் மசூதியும் அடுத்தடுத்து இணைந்திருக்கும். ஒருவருக்கொருவர் மத வேற்றுமை மறந்து 'அண்ணன்', 'மாமா' போன்ற உறவுடன் கொண்டாடுவது மனநிறைவான காட்சியாக இருக்கும்.

25.8.80 முதல் மூன்று தினங்கள் இத்திட்டம் இளையான்குடியில் செயல்படுத்தப்பட்டது. மக்களிடையே ஆர்வமும் வரவேற்பும் இருந்தது. சிறுசேமிப்பு இயக்கத் தொண்டர்களுக்கு உர்சாகத்தை அதிகப்படுத்தியது. இதன் விளைவாக 4337 கணக்குகள் துவக்கப்பட்டன. ரூ. 33,525- தொகை செலுத்தப்பட்டது. பேரூராட்சிப் பகுதியிலுள்ள அனைத்துக் குடும்பங்களும் சேர்க்கப்பட்டன.

இதையடுத்து பரமக்குடி நகராட்சிப் பகுதியிலும் இதை ஏன் செயல்படுத்தி வெற்றிகாணமுடியாது என்ற வேட்கை உள்ளத்தில் உருவானது. அஞ்சலகத்தில் போதிய இடவசதி இல்லாததால் இதற்கெனத் தனி அஞ்சல் நிலையமே தற்காலிகமாகப் பரமக்குடி நகராட்சியின் அலுவலகத்தில் துவக்கப்பட்டது.

பரமக்குடி நகரத்தில் வாழ்க்கை வசதி மிக்கவர்களும் உண்டு, அன்றாடம் வறுமையின் காரணமாக அடுத்த வேலை உணவிற்கு என்ன செய்வோம் என்று ஏங்குபவர்களும் உண்டு, நடுத்தரக் குடும்பங்களும் உண்டு. அன்றைய வருமானத்தின் தொகையையும் மறுநாள் வரக்கூடிய வருமானத் தொகைக்கும் மொத்தமாக சினிமா, ஹோட்டல் போன்ற இடங்களில் செலவிட்டுவிட்டு அல்லல்படும் நெசவாளர் தொழிலாளர் குடும்பங்களும் உண்டு. சேமிப்பு என்பது இதுவரை அவர்கள் அறியாத ஒன்று. பல வகைப்பட்ட சுமார் 8300 குடும்பங்களையும் இத்திட்டத்தில் சேர்த்துப் பயனடையச் செய்துவிட வேண்டுமென்று உள்ளத்தில் உறுதி ஏற்பட்டது. 40 குழுக்களாகப் பிரிந்து தக்க அணுகுமுறையின்மூலம் செயலாற்றியதன் காரணமாக அனைத்துக் குடும்பங்களுமே சேர்க்கப்பட்டன. இந்த முயற்சியின் விளைவாக இங்கு 10,036 தொடர் சேமிப்புக் கணக்குகள் துவக்கப்பட்டன.

இத்திட்டம் மானாமதுரை பேரூராட்சி மற்றும் இராஜகம்பீரம் ஊராட்சிப் பகுதியில் 30.9.80 முதல் 4 நாட்கள் செயல்படுத்தப்பட்டது. மானாமதுரை நகரம் மண்பாண்டத் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம். மண்பாண்டத் தொழிலாளர்கள் அனைவருமே சிறு சேமிப்புக் கணக்குத் துவக்கியுள்ளார்கள். சீட்டுத் தொகை வசூல் செய்வது போன்று அதிகாரிகளும் மற்றவர்களும் வீடுதேடி வந்து வசூல் செய்வதால் அரசே ஏற்று நடத்துகிறது என்று நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் விரும்பியே இத்திட்டத்தில் சேர்ந்து கணக்குத் துவக்குவதாக மண்பாண்டத் தொழிலாளர்கள் கூறியுள்ளார்கள். மானாமதுரை பேரூராட்சிப் பகுதி மற்றும் இராஜகம்பீரம் ஊராட்சிப் பகுதியிலும் சேர்ந்து 5200 புதிய கணக்குகள் துவக்கப்பட்.

துவக்கப்பட்ட கணக்குகளில் மாதம் ரூ. 5, 10, 20, ரூ. 30, 50, மற்றும் ரூ. 100 என்று செலுத்தியவர்களும் உள்ளனர். அன்றாட கூலி வேலை செய்பவர்களும் தெருக்களில் இட்லி வியாபாரம் செய்து பிழைப்பவர்களும்கூட தானாகவே சேமிக்க முன்வந்துள்ளது நெஞ்சுக்கு நிறைவு தருகிறது. 5 ஆண்டுகள் காலத்திற்குச் சேமித்து தொடர்ந்து மாதாமாதம் பணம் செலுத்த வேண்டுமென்ற விவரம் அவர்களுக்கு இப்போது நன்கு தெரியும், நம்பிக்கை ஒளியை அவர்களின் முகத்தில் காண்கிறோம்.

மாதாமாதம் சீட்டுத்தொகை வசூல் செய்வதுபோன்று வீடு தோறும் செல்லக்கூடிய பெண் முகவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்ற வேண்டுமென்று முறைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் கணக்குகளை வரிசைப்படுத்தி சீராக வைத்துள்ளனர். சிவகங்கையிலும் இளையாங்குடியிலும்அனைத்துக் கணக்குகளும் இரண்டாவது மாதமான செப்டம்பர் மாதத்திலும் தொகை செலுத்தப்பட்டுள்ளது மன நிறைவைத் தருகிறது.

விதவைகள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், வறுமையின் காரணமாகத் திருமணம்

மாதம் ஒன்றுக்குச் சுமார் ரூ.300- சம்பாதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதவிர அஞ்சலகங்களில் தொடர் சேமிப்புக் கணக்குப் பிரிவுக்கென்றே சுமார் 7 நபர்களுக்கு எழுத்தர் பதவி கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

தடையின்றி இப் பணி தொடர்ந்து நடைபெறுவதற்கான அமைப்பு உள்ளது. 1985-ஆம் ஆண்டு சிவகங்கையில் சுமார் 30 இலட்சமும், இளையான்குடியில் சுமார் 28 இலட்சமும், பரமக்குடியில் சுமார் 70 இலட்சமும், மானாமதுரையில் சுமார் 34 இலட்சமும், தேனீக்கள் போல் சேமிப்புச் செய்துள்ள



ஆகாத இளம் பெண்கள் மற்றும் வாழ்க்கை வசதியற்றோர் போன்ற 78 நபர்கள் இந்த நான்கு ஊராட்சி ஒன்றியங்களிலும் பெண்முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வாழ்வு பெற்றுள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமனம் பெற்றுள்ளார்கள். ஆர்வம் உள்ளவர்களாக, இத்திட்டத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக சிரமம் இருந்தாலும் பொருட்படுத்தாதவர்களாக உள்ளவர்களை மட்டும் தேர்ந்தெடுக்கிறோம்.

சிவகங்கை, இளையான்குடி, பரமக்குடி, மற்றும் மானாமதுரை ஆகிய இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தப் பெண்முகவர்கள் எந்தெந்தப் பகுதிகளில்

இந்தக் குடும்பங்களுக்குக் கிடைக்கும் என்ற விவரங்கள் மாபெரும் சாதனையாகத் தோற்றமளிக்கிறது. குடும்பத்திற்கும், நாட்டிற்கும் நலம் சேர்க்கும் இப்பணி அடுத்து திருப்புவனத்திலும் துவக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு இதன் மூலம் ரூ. 28.5 இலட்சம் சிவகங்கை கோட்டப் பகுதியில் இருந்து மட்டும் வசூலாகும்.

இதுவரையிலும் சிறுசேமிப்புத் திட்ட வசூலுக்கு இருந்த பழக்கத்தை மாற்று புதிய அணுகுமுறையுடன் மக்கள் இயக்கமாக மாற்றியதும், மாவட்டத்தின் மற்ற பகுதிகளுக்கும், மற்ற மாவட்டங்களுக்கும் விரைவில் பரவி வருவதும் இத்திட்டத்தின் வெற்றிக்கு ஒரு காரணமாகும்.



# தமிழ்க் கடல் தருகின்ற தரமான முத்துக்கள்

கோ. முத்துப்பிள்ளை

ஆட்சிமொழி அகராதியில் காணப்படும் சொற்களை உள்ளது உள்ளவாறு எடுத்துக் கூறினால், எவரும் விரும்பிக் கேட்கமாட்டார். ஆகவே ஆட்சிமொழி வகுப்புகளை நடத்தும் வாய்ப்பு கிட்டியபோது, புதிய முறைகளை நான் வகுத்துக் கொண்டேன்.

ஒரு நாள் ''இராமலிங்கனாரின் புதுமை மொழி பெயர்ப்புகள்'' என்னும் தலைப்பில் பேசுவேன். இன்னொரு நாள் ''தேவநேயப் பாவாணரின் தேன் போன்ற தமிழாக்கங்கள்'' என்னும் தலைப்பில் பேசுவேன். இவ்வாறு தலைப்புகளை அமைத்துக் கொள்ளும்போது கேட்பவர்களுக்குக் கிளர்ச்சி ஏற்படுவதைக் கண்டு களித்தேன். ''அடுத்து என்ன, அடுத்து என்ன'' என்று ஆவலாய்க் கேட்பார்கள். இந்த முறையில் வகுப்புகளை நடத்தி வந்தபோது, ஒரு நாள் ''இணைச் சொற்கள்'' என்னும் புதிய தலைப்பில் பேசத் தொடங்கினேன். ஏறக்குறைய ஒரே பொருளைத் தருகின்ற சொற்கள் நிறைய இருக்கின்றனவல்லவா? இவற்றைப் பற்றிப் பேச வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டேன்.

## புகழ் மாலையா? புகழாரமா?

எடுத்துக்காட்டாக, Finance, Fund என்னும் இரண்டு சொற்களைப் பார்த்தால், இரண்டையுமே ''நிதி'' என்று சொல்கின்றோம். Finance என்னும் சொல்லுக்கு ''நிதி'' என்னும் மொழிபெயர்ப்பு நன்கு பழகிவிட்டது. ஆகவே Fund என்னும் சொல்லுக்குத்தான் வேறொரு தமிழ்ச் சொல்லை அமைக்க வேண்டும்.

''செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்.''

என்று பாடியுள்ளாரல்லவா பைந்தமிழ்ப் பாட்டி ஔவையார்? ஆகவே, Fund என்பதை நிதியம் என்று சொல்லலாம். இவ்வாறு பல செய்திகளைச் சொல்லிப் பாடத்தை நடத்திச் சென்றபோது, Tribute, Encomium என்னும் இரண்டு சொற்களை எடுத்துச் சொன்னேன். முன்னதைப் ''புகழ்மாலை'' என்றும், பின்னதைப் ''புகழாரம்'' என்றும் குறிப்பிட்டேன்.

ஒரு மாணவர் எழுந்து நின்றார். ''ஐயா, Eulogy என்பதைத் தமிழில் எவ்வாறு சொல்வது?'' என்று வினவினார். தெரியாத செய்திகளை அடுத்த வகுப்பிற்குத் தள்ளிப் போடுவது வழக்கம்! ''அடுத்த வகுப்பில் பார்க்கலாம்'' என்று சொல்லி வகுப்பை முடித்தேன். எவ்வளவோ முயன்றும் Eulogy என்னும் சொல்லுக்கு நேரான அழகிய தமிழ்ச்சொல் கிடைக்கவில்லை. அடுத்த வகுப்பு வந்தபோது ''புகழுரை'' என்று சொல்லி விட்டு, விறுவிறு வென்று வெற்றிகரமாகத் திசைதிருப்பினேன்! Eulogy என்னும் சொல் என் மனத்தின் அடித்தளத்தில் எனக்குத் தெரியாமல் கிடந்து கொண்டே இருந்துள்ளது! இதைப் பின்னர் தான் நான் தெரிந்து கொண்டேன்.

## வைரக்கற்கள் !

ஒரு நாள் அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருக்கையில், நடுவழியில் முன்பின் தொடர்பு எதுவுமின்றி, எங்கள் கிராமத்தில் பேசப்படும் ''மெப்பு'' என்னும் சொல் நினைவில் தோன்றியது. ''அவன் மெப்பாகப் பேசுகின்றான்'' என்று சொல்வார்கள். அலுவலகத்திற்குச் சென்றவுடன் தமிழ்ப் பேரகராதியைப் (Tamil Lexicon) புரட்டிப் பார்த்தேன். என்னே வியப்பு! ''மெப்பு'' என்னும் சொல்லுக்கு நேராக Eulogy என்று

கொடுக்கப்பட்டிருந்தது. ஆம்! தமிழிலே புதையல்கள் நிறைய இருக்கின்றன. பொன், வெள்ளி முதலான உலோகங்கள் மட்டுமல்ல. வைரக்கற்களே கிடைக்கின்றன.

சில நாட்கள் கழித்து நண்பர் திரு எஸ். எஸ். இராமசாமி அவர்கள் ''இராமப்பய்யன் அம்மானை'' என்னும் நூலைப்பற்றி அலுவலகக் கூட்டத்தில் சொற்பொழிவு ஒன்றை ஆற்றினார். அதன் பின்னர் அந்த நூலை அவரிடமிருந்து பெற்று முழுவதும் படித்துப் பார்த்தேன். அந்த நூலில் வருகின்ற இரண்டு வரிகளை இங்கே தருகின்றேன்:—

''ஆண்டவனே இப்போ அடியேன்சொல்
விண்ணப்பம் கேள்
துலுக்கர் படையை மெய்ப்பாகச்
சொன்னீரே!''

மெய்ப்பின் மெருகு இப்போது தெரிகின்றதல்லவா? Eulogy என்றால் மெய்ப்பு. இவ்விரண்டு சொற்களுக்குமிடையே அழகுப் போட்டியல்லவா நடைபெறுகின்றது?

ஆளுக்கொரு மொழிபெயர்ப்பு...

Gentleman's agreement என்னும் தொடரை நண்பர் ஒருவர் எடுத்துக்கூறி, அதைத் தமிழில் எவ்வாறு அமைக்கலாம் என்று வினவினார். Treaty, Contract, agreement என்னும் சொற்கள் அடிக்கடி ஆட்சி மொழியில் பயன்படுத்தப் பெறும் சொற்களாகும். இவற்றை முறையே, உடன்படிக்கை, ஒப்பந்தம், உடன்பாடு என்று தமிழில் அழகுற அமைத்து மகிழ்கின்றோம்.

Gentleman's agreement என்னும் தொடரை ''கனவான்களின் உடன்பாடு'' என்று மொழிபெயர்க்கலாமே என்று அருகிலிருந்த இன்னொரு நண்பர் எடுத்துக் கூறினார். பெருங்கூட்டமே கூடிவிட்டது என்று கூறலாம்! Gentleman யார் என்று கண்டுபிடிக்க நண்பர் குழாம் மொய்த்துக் கொண்டது!

Gentleman என்னும் சொல்லுக்குக் ''கனவான்'' என்னும் சொல் பொருந்துமா? அதாவது முழுமையாகப் பொருந்தி நிற்குமா என்று ஆராயலானோம். ''பண்பாளர்'' என்றும் ''நாகரிகர்'' என்றும் ''சீரியார்'' என்றும் ''சான்றோர்'' என்றும் ஆளுக்கொரு மொழிபெயர்ப்பைத் தந்து உதவினார்கள்! இவை, தமிழின் வளத்தைக் காட்டுகின்றனவேயல்லாமல், பொருத்தத்தைப் புலப்படுத்துவதாகக் காணோம். ஆயினும், நண்பர்கள் விடுவார்களா? ஆளுக்கொரு அழகிய பாட்டினை மேற்கோள் காட்டினர்.

''பண்பாளர்'' என்னும் சொல் பழக்கத்திலுள்ள நல்ல சொல். ''நாகரிகர்'' என்னும் சொல் நயமாக உள்ளது. ''சீரியார்'' என்னும் சொல்லும் சிறப்பாகவே உள்ளது. எனினும் இவற்றுள் எதையும் ஏற்றுக் கொள்ளாமல், மனம் திகைத்து நின்று கொண்டிருந்தது! ''சான்றோர்'' என்னும் சொல், அளவிற்கு அப்பாற்பட்ட, சிறப்பினையுடையது. எனவே அதுவும் பொருந்தவில்லை.

Gentleman's agreement என்பதற்கு Binding in honour, but not enforceable at law என்னும் அகராதிப் பொருள் மனத்திரையில் அடிக்கடி வந்து போயிற்று. ஆயினும் திக்கு தெரியவில்லை!

நாளுக்கொரு குறள்!

ஈண்டு இன்னொரு செய்தியையும் குறிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் முதல் வேலையாக ஒரு குறட்பாவைப் படித்து அதன் பொருளைச் சிந்தித்துக் கொண்டிருப்பது எனக்கு வழக்கமாகிவிட்டது. ஒரு நாள், அதாவது மேற்சொன்ன மொழிபெயர்ப்புச் சிக்கல் ஏற்பட்ட பிறகு ஒருநாள், பின்வரும் குறட்பாவைப் படிக்க நேர்ந்தது.

''தீவினையார் அஞ்சார் விழுமியார்
அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.''

இதற்குமேல் விளக்கம் தேவையில்லை என்றே எண்ணுகின்றேன். ஆம். ''விழுமியார்!'' இவரைத் தெரியுமே உங்களுக்கு! இவர்தான் ஆங்கில Gentleman! Gentleman's agreement= விழுமியார் உடன்பாடு. Binding in honour என்னும் தொடரையும் ''விழுமியார் அஞ்சுவர்'' என்னும் தொடரையும் ஒப்பிட்டு நோக்கி இன்புறலாம்.


தொடர் செய்யும் இடர்!

Relative அல்லது Relation என்னும் சொல்லை எடுத்துக் கொண்டால் ''உறவினர்'' என்று உடனே சொல்லிவிடுவோம். அதைப் போலவே Kinsman என்று சொன்னாலும் ''உறவினர்'' என்று சொல்லி விடுவோம். மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு சமயம் Relative or Kinsman என்னும் தொடர் ஒரு வாக்கியத்தின் இடையிலே வந்தது. இரண்டு சொற்களும் தனித்தனியாக வந்தால் எந்தத் தொல்லையும் இல்லை. ஆனால், மேற்சொன்னவாறு ஒன்றாகப் பின்னிக்கொண்டால், தொடர் செய்யும் இடர் சொல்லுந்தரமன்று! இரண்டு சொற்களுக்கும் பொருளிலே ஏதாவதொரு சிறு வேறுபாடு, நுட்பமான வேறுபாடு இருக்கத்தான் வேண்டும் என்பது மட்டும் தெளிவாகப் புலப்பட்டது. ஆங்கில அகராதியைப் புரட்டிப் பார்த்த போது Kinsman என்னும் சொல்லுக்குக் ''குருதி உறவுடையவர்'' என்பது தெரிய வந்தது. அவ்வாறாயின் Kinsman என்னும் சொல்லுக்குத் தமிழ் என்ன? எல்லாருமே திகைத்துப் போய் பரக்க விழித்துக்கொண்டிருந்தோம்! விழியிருந்தும் மொழி தெரியவில்லை!

இளைஞர் சொன்ன கிளைஞர்!

கவிஞர் வைரமுத்து ஓர் இளஞ்சிங்கம். அறிவுக் களஞ்சியம். சிறிதும் தயக்கமின்றி, ''கிளைஞர்'' என்னும் இனிய சொல்லை எடுத்து வழங்கினார்! கிளைத்துச் செல்பவர் கிளைஞர்தானே! குருதி உறவு உறுதியாகத் தெரிகிறதல்லவா? கவினுறு சொல்லைக் கவிஞர் வைரமுத்து வழங்கிய பிறகு விளக்கங்களுக்குக் குறைவே இல்லை!

''காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனில் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்''



நாலடியார் வழங்கும் இந்த நல்லுரையில் கிளைஞர்கள் நிறைந்து நிற்கின்றனர்! நாலடியைச் சொல்லிய பிறகு, இரண்டடியையும் சொல்ல வேண்டுமல்லவா?

''கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்.''

**எல்லாம் இருக்கிறது!**

தமிழர்களுக்கு உறவினர்கள் ஏராளம்! ''கேளிர்'' என்னும் சொல் ''உறவினர்'' என்னும் பொருளையும் தருகின்றதல்லவா?

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் பொன்னுரையைப் போற்றுபவர் நாம். 1968 ஆம் ஆண்டு இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றபோது, இதனை ஆங்கிலத்தில்,

"Every land is my land and
Every man is my Kinsman"

என்று மொழிபெயர்த்தோம். ''எல்லாம் இருக்கிறது எங்கள் தமிழில்'' என்று நம் வாய் நம்மையும் அறியாமல் சொல்லி மகிழ்கின்றது.

**பேரொளி தோன்றியது!**

பல்வேறு மொழி பெயர்ப்புகளின் பொருத்தங்களை ஆராய்ந்து கொண்டிருந்த போது, When the Supreme Court Judge was Present in the Court என்னும் தொடரைப் பார்க்க நேர்ந்தது. Supreme Court Judge என்றால் ''உச்ச நீதிமன்ற நீதிபதி'' என்று சொல்லிவிடுகிறோம். ஆனால், was present என்னும் மிகவும் நன்றாகத் தெரிந்த சொற்கள் தாம் மிகவும் தொல்லை கொடுத்தன.

Present Sir என்று வரும்போது ''உள்ளேன் ஐயன்மீர்'' என்று எளிதாகச் சொல்லி விடுகின்றோம். உச்ச நீதிமன்ற நீதிபதி பெருமதிப்பிற்குரியவராகையால், அவர் ''வந்திருந்தபோது'' என்று சொல்லுவது சற்றும் பொருந்தாது. அன்னாருடைய பெரிய பதவிக்கும், பெருமை நிலைக்கும் ஏற்றாற் போன்ற சொற்களை அமைக்க வேண்டுமே?

ஒரு நண்பர் மிக முயன்று, இந்தச் சிக்கலுக்குத் தீர்வு ஒன்றைக் கண்டுபிடித்தார்! ''உச்ச நீதிமன்ற நீதிபதி பிரசன்னமாகியிருந்தபோது'' என்பதுதான் அவருடைய மொழிபெயர்ப்பு. ''பிரசன்னம்'' என்னும் சொல் ஏனோ எடுபடவில்லை. கூடியிருந்த யாருக்குமே இது பிடிக்கவில்லை. ''ஆண்டவனைக் குறிப்பிடும்போது வேண்டுமானால் ''பிரசன்னம்'' என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம், அது இங்கே பொருந்தாது'' என்று இன்னொரு நண்பர் மெல்லிய குரலில் தெரிவிக்கத் தயங்கிக் கொண்டிருந்தார்! ''சரி, இதனை அடுத்த நாள் பார்க்கலாம்'' என்று அப்படியே தள்ளிப் போட்டு விட்டோம்.

வளமான தமிழ் மொழியில் இதற்கொரு வாகான தமிழ்ச்சொல் இருந்தாகவேண்டும் என்று எண்ணி எண்ணி நான் கவலையில் மூழ்கிக் கிடந்தேன். இரவெல்லாம் துயிலவில்லை. காலையிலும், வேலை ஓடவில்லை. அலுவலகத்தை நெருங்க நெருங்க அச்சமும், தவிப்பும் அதிகரித்தன.

திடீரென ஒரு பேரொளி தோன்றியது! அந்த ஒளியில் அழகிய செந்தமிழ்ச் சொல் ஒன்று தெறித்து வந்தது! எல்லாரும் ஆவலாக எதிர்நோக்கிக் கொண்டிருந்தபோது, 'உச்ச நீதிமன்ற நீதிபதி நீதிமன்றத்தில் வீற்றிருக்கையில்'' என்று தயக்கம் சிறிதுமின்றி மிடுக்காக எடுத்துக் கூறினேன். ''ஆம். வீற்றிருத்தல் என்னும் சொல் **பெருமையோடு அமர்ந்திருத்தல்** என்னும் பொருள்படுமே'' என்று சொல்லி எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்!

**நடுக்கடலில் தத்தளித்தோம்!**

இதைப் போன்ற இன்னொரு மொழி பெயர்ப்பு. When the deck is made of iron, TO COVER with wooden planks portions of the deck situated immediately above the quarters of the officers என்னும் தொடரை உற்று நோக்குவோம்.

இது, ''கப்பலின் மேல்தளம் இரும்பால் செய்யப்பட்டிருக்கும்போது, அலுவலர்களின் உறைவிடங்களுக்கு நேர்மேலே அமைந்துள்ள கப்பல்தளத்தின் பகுதிகளை மரப்பலகைகளால் மூடுவது'' என்று மொழிபெயர்க்கப் பட்டிருந்தது.

''மூடுவது'' என்னும் சொல் சிறிதும் பொருந்தவில்லை என்பதை எல்லாரும் உணர்ந்து கொண்டோம். மரப்பலகைகளைப் பரப்பி மூடிவிட்டால் போதுமா? அவை வலிவாக இணைந்து நிற்பது எங்ஙனம்? ஒன்றிவிருந்து ஒன்று விலகி, ஒரேயடியாகப் பேரொலியுடன் பெயர்ந்து விழுவதற்கு ஏதுவாகுமே!


To Cover என்னும் தொடருக்கு ''மூடுவதற்கு'' என்னும் பெயர்ப்பு அகராதிப்படி சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் பொருள் மட்டுந்தான் பொருந்தவில்லை!

நீண்டநேரம் எல்லாருமே சிந்தனையில் ஆழ்ந்தோம். கப்பலைப் பற்றிய செய்தியல்லவா இது! மொழிபெயர்ப்பிற்காக நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தோம். ஏதேனும் சிறு துரும்பாவது கிடைக்காதா என்று தத்தளித்துக் கொண்டிருந்தோம். நல்ல மிதவையே கிடைத்துவிட்டது!

To Cover என்பதற்கு ''வேய்வதற்கு'' என்று எழுதிக் கொள்ளலாமென்று தெரிவித்தேன். பொருத்தம் பளிச்சிட்டது. ''கூரை வேய்வது'' தமிழனுக்குத் தெரிந்த செய்தி தானே?

தமிழ்க் கடல் தருகின்ற தரமான முத்துக்கள் ஏராளம்! ஏராளம்! முத்து வேண்டுவோர் முந்திச் செல்வீர்! மற்றையோர் சற்றே விலகி வழிவிடுவீர்!

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# கொடுமணல்

# ஒரு சங்ககாலப் பேரூர்

—புலவர் செ. இராசு

பெரியார் மாவட்டம்-பெருந்துறை வட்டம், சென்னிமலை வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர் கொடு மணல். சென்னிமலைக்குத் தென் மேற்கில் 15 கி. மீ. தூரத்தில் நொய்யலாற்றின் வடகரையில் இன்று கொடு மணல் உள்ளது. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான குறுப்பு நாட்டைச் சேர்ந்தது அவ்வூர்.

கொடுமணல் அருகே உள்ள தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவரிடம் சில ஓலைப் பட்டையங்கள் உள்ளன. அவற்றின் மூலம் தென் குறும்ப நாடு என்ற பகுதி வீரசோழபுர வள நாடு என வழங்கிற்று என்றும் அந்நாடு கொடு மணல் உள்ளடக்கிய ஏழு ஊர்களைக் கொண்டது என்றும் அறிகின்றோம்.

சங்க இலக்கியத்தில் ஒன்றான பதிற்றுப்பத்தில் இரண்டு பாடல்களில் கொடு மணம் என்ற ஊரும் அங்குச் செய்யப்படும் அழகிய அணிகலன்கள் பற்றிய குறிப்பும் வருகின்றன.

'கொடு மணம் பட்ட வினை மான் அருங்கலம்' (74)


'கொடு மணம் பட்ட..நன் கலம்' (67) என்பன அப்பதிற்றுப் பத்து வரிகளாகும்.


மூற்றொரு பதிற்றுப்பத்துப் பாடலில் (48) வேனிற் காலத்தில் காஞ்சியாற்று ஓர மக்கள் வீட்டில் இருக்காமல் தம் சுற்றத்தாருடன் காஞ்சி ஆற்றுக் கரைகளில் உள்ள சோலைகளில் தங்கி விழா எடுத்து பொழுது போக்குவார்கள் என்ற குறிப்பு வருகிறது. (காஞ்சி - நொய்யலின் பழம் பெயர்) நெய்யாலாற்றின் இரு கரைகளிலும் பரந்து கிடந்த பேரூராகக் கொடுமணல் முன்பு இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

சங்ககாலக் கொடு மணம்தான் கொடு மணல் என சில புலவர்கள் (சென்னிமலை புலவர் சு. வேலுசாமி) பெயர் ஒப்புமை கருதிக் கூறினாலும், தக்க சான்றுகள் இன்றி அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தது.

அண்மையில் கலைமகள் தொல்

பழங்கற்கால ஆயுதங்கள், விளையாட்டுக் கருவிகள்





சங்கு வளையங்கள், சுடுமண் மணிகள்,
படிகக் கற்கள்

பொருள் கலைக்கூடத்தின் சார்பில் செல்வி எம். முத்தையா பி.ஏ., பி.டி., அவர்களும், கல்வெட்டு ஆய்வாளர் புலவர் செ. இராசு, எம்.ஏ., அவர்களும் கொடு மணல் சென்று பல அரிய பொருட்களைத் தேடிக் கண்டுபிடித்திருக்கின்றனர். அப்பொருட்கள் ஆதாரங்களோடு இன்றைய கொடுமணல்தான் சங்ககாலக் கொடுமணம் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கப் போதுமானதாக உள்ளன.

சங்குகளை அறுத்து, வளையலும் பல்வேறு ஆபரணங்களும் செய்தமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. கொடுமணலில் அவை அரிய வேலைப்பாடு கொண்டவை கறுப்பு, சிவப்பு, வெள்ளைக் கோடுகள் உள்ள வளையல்களும் கிடைத்திருக்கின்றன.

பவளத்திலும், கற்களிலும் சங்குகளிலும் செய்யப்பட்ட பல்வேறு மணிகளும் பதக்கங்களும் கொடு மணலில் கிடைத்திருக்கின்றன.

வெள்ளை சிவப்புக் கோடுகளுடன் கொங்கு நாட்டுக்கே உரிய அழகிய பானை ஓடுகளும் இங்கே பலகிடைத்திருக்கின்றன. ஆனால் கொடி போன்ற மலர் ஓவியம் தீட்டப் பெற்றும், அழகிய முத்திரைகள் பதிக்கப்பட்டும் உள்ள பானை ஓடுகள் இங்கே கிடைத்திருப்பது மிகச் சிறப்பானதாகும்.

சிறுவர்கள் பயன்படுத்திய வண்டிச் சக்கரங்களும், ஓட்டுச் சில்லுகளும் கிடைத்துள்ளன. குறியீடுகள் (கிராபிடி) உள்ள பானை ஓடுகள் பல கிடைத்தன. செதுக்கப்பட்டு அழகிய முறையில் அணிகலன் செய்யப் பயன்படுத்திய வெண்படிவக் கற்கள் கிடைத்துள்ளன.

நுண்கற்காலக் கருவிகளும், பழங்கற்காலக் கருவிகளும் இங்கு கிடைத்துள்ளமை அரிய கண்டுபிடிப்பாகும்.

5 செ.மீ. உயரத்தில் கிடைத்த சுடுமண் விநாயகர் மிக அரியதாகும். கி. பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் வாதாபி கொண்ட சிறுத்தொண்டருக்குப் பின்னரே தமிழகத்தில் விநாயகர் வழிபாடு புகுந்ததாக ஒரு கருத்து ஆய்வாளரிடையே நிலவுகிறது. ஆனால் ஏறத்தாழ 2,500 ஆண்டுகட்கு முன்பே இவ்வழிபாடு தமிழகத்தில் நிலவியது என்பதை இவ்விநாயகர் உருவம் மெய்ப்பிக்கிறது.

கலப்பையினால் உழுகின்றபோது ஒளி வீசக்கூடிய மணிக்கற்கள் வெளிப்படும் என்ற பதிற்றுப்பத்து (பாடல் 58) வருணனைக்கு ஏற்ப மேல் பரப்பிலேயே வண்ணக்கற்கள் இங்கு அகப்படுகின்றன.

சங்க காலத்தில் உரோமானியருக்குப் பலவண்ண மணிகள் அளித்தபடியர், கொடு மணலிலிருந்து சுமார் 6 கி.மீ. தூரத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, பண்டைக் காலத்தில் காஞ்சிமாநதிக் (நொய்யல்)கரை நாகரிகம் ஒன்று மிகச் சிறப்பாக இருந்தது என்பதை விளக்கப் போதுமான சான்றுகளாக இவை திகழுகின்றன.

அருகே பழங்காலத்தில் கட்டப்பட்ட நொய்யல் **அணை** அருகில் உள்ளது. (32 அணைகள் நொய்யலில் இருந்ததாகச் சோழன் பூர்வ பட்டயமும் பிற பாடல்களும் கூறும்).

'ஆதி கொடு மணல்'

'தேர்ந்த கொடு மணல்'

'சிறப்பான கொடு மணல்'

'ஏர் மேவும் கொடு மணல்'

'மோது புகார் கொடு மணல்'

என்றெல்லாம் பாராட்டிப் பல பாடல்கள் கொடு மணலைக் கூறுகின்றன.

இங்குக் கிடைத்த பொருட்கள் சிலவற்றைப் பார்வையிட்ட தொல்பொருள் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி பெரிதும் பாராட்டினார். ஆய்வாளர் புது. போ. வெங்கடராமனும் இதை ஆய்ந்து தொன்மையை உணர்த்தினார்.

கலைமகள் கலைக்கூடத்தின் சார்பில் செல்வி. எம். முத்தையா ஆய்வாளர் புலவர் செ. இராசுவும் தொடர்ந்து ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளார்கள்.

# பால் இன மருத்துவம்!

இந்தியாவிலுள்ள பால்இன மருத்துவக் குழுவின் முதலாவது கருத்தரங்கம், சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் (25.10.80) நடைபெற்றது.

பால்இன மருத்துவம் குறித்த இக் கருத்தரங்கை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி.ஹண்டே அவர்கள் துவக்கி வைத்தார்.

சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் திரு சிவராஜ் வரவேற்புரையாற்றினார்.

பால்இன மருத்துவக் குழுவின் தலைவர், மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் சாம் ஜி.பி.மோசஸ், மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திரு எஸ். ஞானதேசிகன், பேராசிரியர் பி.என்.ரங்கையா, மருத்துவத்துறை செயலாளர் திரு எஸ். பி. அம்புரோஸ் ஐ.ஏ.எஸ். ஆகியோர் பால்இன மருத்துவம் குறித்து உரையாற்றிய பின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் துவக்க உரை ஆற்றினார்.

கருத்தரங்கின் முடிவில், அமைப்புச் செயலர் டாக்டர் திரு வி. சேஷையா நன்றியுரையாற்றினார்

**கருத்தரங்கம்**

மிகவும் பயனுள்ள விதத்தில் அமைந்த இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற அனைவரும் இனக்கவர்ச்சி, பால்இனக் கல்வி, அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் உரையாற்றினார்கள். அதன் விவரம் வருமாறு:

பாலுணர்வு பற்றி இங்கே இந்தக் கருத்தரங்கத்திலே ஆண்களும் பெண்களும் கூடிப் பேசவிருக்கிறோம். சாதாரண மனிதர்களுக்கு மட்டுமல்ல; மருத்துவத் துறையிலேயே உழல்கிறவர்களுக்கும் கூட இதுபற்றி வெட்ட வெளிச்சமாகப் பேசுவதென்பது கூச்சமாகவும், ஓரளவுக்குச் சங்கடமாகவும் தான் இருக்கும்.

ஆனால் பாலுணர்வு பற்றிய செயல் முறைகளையும், மருத்துவ அணுகு முறைகளையும் எல்லாரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். குழந்தைப் பருவம், வளரும் பருவம், வாலிபப்பருவம், வயோதிகப் பருவம் என மனிதர்களின் எல்லாப் பருவத்திலுமே பாலுணர்வுப் பிரச்னை எழவே செய்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ வல்லுநர்களை அணுகவே செய்கிறார்கள்.

**மு.எல். ஆர்**

**பாலுணர்வே கேவலமா?**

முக்கியமாக மேற்கத்திய நாடுகளில் -அதாவது அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளிலும், மத்தியக் கிழக்கு நாடுகளிலும், இஸ்ரேலிய நாட்டிலும், அராபிய நாடுகளிலும் பாலுணர்வு பற்றிய மருத்துவம் மருத்துவத் துறையின் முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. பாலுணர்வுக்கான மருந்துகள் அங்கெல்லாம் தனிக் கவனத்தோடு தயாரிக்கப் படுகின்றன.


பாலுணர்வு என்பது கணவன் மனைவியிடையே எழக்கூடிய பிரச்னை என்றோ, உடலுறவு தொடர்பானது என்றோ, அருவெறுப்பான ஒன்று என்றோ மட்டும் யாரும் கருதத் தேவையில்லை. இது பொதுவானது. ஆனால், நம் நாட்டைப் பிடித்த துரதிர்ஷ்டம்- பாலுணர்வு என்பது விபரீத எண்ணத்தைத் தூண்டும் புத்தகங்களாக வெளிவந்தும், உடலுறவைச் சித்திரிக்கும் ரகசியத் திரைப்படங்களாக வெளியிடப்பட்டும் அசிங்கமான முறையில் விளம்பரப்படுத்தப் பட்டு ஒரு கேவலமான பின்னணியை சமுதாயத்தில் உருவாக்கியுள்ளது.

இளைஞர் சமுதாயம் அந்தப் புத்தகங்களின் படியும், படங்களின்படியும் வேண்டாத பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு விபரீத விளைவுகளுக்கு ஆளாகிவிடுகிறது. ஆகவே, அத்தகைய விளம்பரங்கள், இயற்கைக்கு மாறான பழக்கங்களைக் கற்பிக்கும் அத்தகைய சம்பவங்கள் முதலில் தடுக்கப்பட்டாக வேண்டும்.

ஆணுக்கானாலும், பெண்ணுக்கானாலும் பாலுணர்வு அவசியம் இருக்க வேண்டும். அது இல்லாத நிலையில்தான் ஆணும் இன்றிப் பெண்ணும் இன்றி 'அலி' ஆகிறார்கள் சிலர்.

**அளவோடானால் ஆபத்தில்லை!**

பாலுணர்வு என்பது அளவோடு இருக்கிறவரை எந்தவித



மான ஆபத்தும் இல்லை. மருந்துகளின் துணையால் பாலுணர்வு என்பது கூடாத ஒன்றாகும்.

•

பாலுணர்வுப் பாதிப்பு ஏற்பட்டோர் மருத்துவப் பொது அறிவோடு அணுகப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எம்.பி.பி.எஸ். பட்டம்பெற்று வெளியே வருகிறபோது கூட சிலர் இது குறித்த போதுமான அனுபவ அறிவு அற்றவராக இருப்பதைப் பார்க்கிறோம். எம்.பி.பி.எஸ். என்ன, எம்.டி பட்டதாரியே இதைப் பற்றி பூர்வாங்கமாக அறியாமலிருக்கக் கூடும். மருத்துவக் கல்வி போதிக்கப்படுகிற முறைதான் இதற்குக் காரணம்.

மனோ தத்துவ நிபுணர்களில் சிலரே கூட இப்போதெல்லாம் பாலுணர்வு பற்றி அறிந்துகொள்வதில் அக்கறை கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆனால், தாங்கள் இது பற்றித் தெரிந்துகொண்ட நுணுக்கங்கள் பற்றி அவர்கள் அவ்வளவாக வெளியே சொல்லிக் கொள்வதில்லை.

இதற்குக் காரணமே -பொது மருத்துவ நிபுணர்களுக்கும், மனோதத்துவ நிபுணர்களுக்கும் இடைப்பட்ட தொடர்பு பலவீனமாக இருப்பதுதான். இப்படி இங்கே பாலுணர்வு மருத்துவம் என்பது படிப்பளவிலேகூட ஸ்திரமற்றதாகவே இருக்கிறது.

**பால்வினை நோய்**

ஆனால் - அமெரிக்கா, ஜப்பான் போன்ற மேல் நாடுகளில் பாலுணர்வு குறித்த கல்வி பல்கலைக் கழகங்களிலும் போதிக்கப்படுகிறது. பல்கலைக் கழகத்தில் இதற்கென ஒரு தனிப்பிரிவே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

கட்டுப்பாடற்ற பாலுணர்வு காரணமாகவே பால்வினை நோய் போன்றவைகள் (Sexually Transmitted Diseases) ஏற்படுகின்றன. காதலுக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும் இதைக் 'காதல்வியாதி' எனச் சிலர் வேடிக்கையாகச் சொல்லுவதும் உண்டு!

பாலின மருத்துவம் என்பது பால்உணர்வு காரணமாகப் பாதிப்பு ஏற்பட்டபின் உதவுவது என்பது மட்டுமல்ல; உபாதை உண்டாகு முன்பே தடுப்பதுமாகும்.

# இஞ்சி


மா. இளங்கோவன்

இ. இரா. சுதந்திரபாண்டியன்

அகில இந்திய ஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத் திட்டம்

கோவில்பட்டி.


இஞ்சியில் உபயோகப்படுத்தப்படும் பாகம் வேர்ப் பகுதியாகும்.

இந்தியாவில் தொன்றுதொட்டு இஞ்சி ஒரு முக்கிய வாசனைப் பொருளாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இஞ்சி மணமூட்டும் பொருளாகவும், முக்கியமாக பலவகை மருந்துகளிலும் பயன்படுத்தப்படுகிறது.


இஞ்சி வாசனைப் பொருளாக மதுவகைகளுடனும், காபி, டீ போன்ற பானங்களுடனும் சேர்க்கப்படுகிறது. உலகிலேயே இந்தியாவில்தான் இஞ்சி அதிக அளவில் உற்பத்தியாகிறது.

இந்தியாவில் பரவலாக எல்லா மாநிலங்களிலும் இஞ்சி பயிர் செய்யப்படுகிறது. இந்தியாவில் இஞ்சி 27,000 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, 44,000 டன்கள் காய்ந்த இஞ்சி உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்த உற்பத்தியில் 10 சதம் முதல் 15 சதம் வரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் இஞ்சியில் பெரும் பகுதியை மத்திய கிழக்கு, அரபு நாடுகள் இறக்குமதி செய்கின்றன. மொத்த உற்பத்தியில் கேரள மாநிலத்தில் மட்டும் 60 சதம் முதல் 70 சதம் அளவு உலர்ந்த இஞ்சி உற்பத்தியாகிறது. மற்றும் தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கர்நாடகம், ஆந்திரம், குஜராத் ஆகிய மாநிலங்களிலும் பரவலாகப் பயிர் செய்யப்படுகிறது.

இஞ்சி பயிர் செய்ய மிததட்பவெப்ப சீதோஷ்ணநிலை ஏற்றது. இது கடல் மட்டத்திலிருந்து 1500 மீட்டர் உயரம் உள்ள பகுதிகள் வரை பயிர் செய்யப்படுகிறது. இஞ்சி நன்றாகப் பயிர் செய்ய நல்ல வடிகால் வசதி உள்ள ஆழமான இருமண்பாடுள்ள நிலம் ஏற்றது.


இஞ்சியில் மாரன், வைநாடு, ரியோடி ஜெனிரா, சைனா, மானன்தோடி, கருப்பப்பாடி எனப் பல வகை உண்டு.

இஞ்சியில் காய்ந்த இஞ்சியாகவும், பச்சையாகவும், எண்ணெய் எடுப்பதற்கும் ஏற்ற பல வகைகள் உள்ளன.



மாணவர் பக்கம் :

# இளம் ஓவியர்




''**வே**லை கிடைத்தாலும் ஓவியக் கலையை விடமாட்டேன்!'' என்று கூறுகிறார் இளம் ஓவியர் திரு மு. ரவி.

பி.எஸ்சி., முதலாவது வகுப்பில் தேறிய இவர், தற்போது வேலைக்கு முயன்று வந்தாலும், சித்திரம் தீட்டுவதை முழுநேர வேலையாகக் கொண்டுள்ளார்.

பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே இவருக்குச் சித்திரத்தில் ஆர்வம் பிறந்தது. பள்ளி ஆண்டு மலர்களில் இவர் சித்திரங்கள் வரைந்துள்ளார். ''சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்'' என்பது போல சித்திரத்திலும், பேச்சுப் போட்டியிலும் இவர் பரிசுகள் பெற்றுள்ளார்.

''வேலை இல்லையே!'' என்று ஏங்கித் தவிக்காமல்-பொன்னான நேரத்தையெல்லாம் வீணாக்காமல், சொந்தமாகத் தம் பெயரிலேயே ஒரு கலைக்கூடத்தை நடத்தி ''ஓவியம்செய்வோம் நல்ல காவியம் செய்வோம்!'' என்ற பாரதியின்



வாக்கிற்கிணங்க வண்ணக்கோலம் படைத்து வருகிறார், இந்த இளம் ஓவியர்.

ஓவியக் கலையில் படிப்படியாக வளரத் தூண்டுகோலாக இருந்தவர், இவரது தந்தை திரு மா. முத்து அவர்கள். இவர் பிரபல ஓவியர். கேட்க வேண்டுமா? தந்தை மூலம் தனயன் இப்போது ஒளிவிடுகிறார்.

ஓவியம் வரைவதில் எல்லா முறைகளையும் இவர் கற்றிருக்கிறார். தற்போது இவர், பத்திரிகைகள் பலவற்றுக்குப் படங்கள் போட்டு வருகிறார். தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடத்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியிலும் இவர் கைவண்ணம் காட்டியிருக்கிறார்.

பேட்டி: பி. வி. கிரி



# கடல் தரும் உணவு

உலக மக்களுக்கு ஊட்டமளிக்கும் பிராணிப் புரோட்டீன் சத்துக்களில் 25 சதவிகிதம் உலகக் கடல்களிலிருந்தே கிடைக்கப் பெறுகிறது. இதில் பாதி மனிதனுக்கு நேரடியாக உணவுப் பண்டங்களாகவும், மற்றொரு பாதி கால்நடை உணவாகவும் பயன்படுத்தப்படுகிறது.

கடல் பிராணிகளிலிருந்து கிடைக்கும் புரோட்டீனில், இதர புரோட்டீன்களைக் காட்டிலும் அமினோ அமிலங்களின் சேர்க்கை தரமாக உள்ளது ; தரையில் வாழும் பிராணிகளிலிருந்து கிடைக்கும் புரோட்டீனைக் காட்டிலும், கடல் வாழ்ஜீவராசிகளின் புரோட்டீன் விரைவில் ஜீரணமாகக் கூடியது.

இறைச்சியில் இருப்பதையும் விட மீன் உணவில் அரிய வைட்டமின்களும், இதர தாதுப்பொருள்களும் உள்ளன. ஆகவே, கடலிலிருந்து, பெறப்படும் உணவு, அதிக உடல் பருமன், வயிற்றுக் கோளாறு, கல்லீரல் நோய், நீரிழிவு ஆகிய நோய்களினால் அவதிப் படுபவர்களுக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கடலில் பொதிந்துள்ள இந்த உணவு வளங்கள் விஞ்ஞான ரீதியாக அடிப்படையில், பெறப்பட வேண்டும்.

கடலில் துரதிருஷ்டவசமாக, உலகக் கடல்களில் மேன்மேலும் நச்சுப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 6,000,000 டன் எண்ணெய் கடலில் கொட்டப்படுகிறது. சிலரது கணிப்பின்படி, அது 10,000,000 டன்களிலிருந்து 15,000,000 டன்கள் வரைகூடச் செல்கிறது.

அடிக்கடி எண்ணெய்க் கப்பல்கள் உடைவதையும், அவற்றிற்கு விபத்துக்கள் ஏற்படுவதையும் பற்றி நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். கடல் வாழ் உயிரினங்களுக்கு, அது ஏற்படுத்தும் நாசம் மிகப் பெரிது.

''ரொட்டியைத் தந்தை என்றால், தண்ணீர்தான் தாய்' என்று ஒரு பழைய ரஷ்யப் பழமொழி உண்டு. கடல் நீரை நாம் மாசடையாமலும், நச்சுப்பொருள்கள் சேராமலும் பாதுகாக்க வேண்டும்.

இதோ ஒரு புள்ளி விவரம்!

மத்திய-கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 1979-ஆம் ஆண்டு 13.88 இலட்சம் டன் கடல்மீன் உற்பத்தி செய்யப்பட்டது.

கேரளா மாநிலம் 3 இலட்சத்து 31 ஆயிரம் டன்னும், மகாராஷ்டிரா 2 இலட்சத்து 93 ஆயிரம் டன்னும், தமிழ்நாடு 2 இலட்சத்து 35 ஆயிரம் டன்னும், குஜராத் மாநிலம் 1 இலட்சத்து 91 ஆயிரம் டன்னும், கர்நாடகம் மாநிலம் 1 இலட்சத்து 21ஆயிரம் டன்னும் ஆந்திரப் பிரதேசம் 91 ஆயிரம் டன்னும், ஒரிஸ்ஸா 52 ஆயிரம் டன்னும், கோவா 25 ஆயிரம் டன்னும், மேற்கு வங்காளம் 11 ஆயிரம் டன்னும் கடல் மீன் உற்பத்தி செய்துள்ளன.

இலட்சத் தீவு மற்றும் அந்தமான் தீவுகளில் 6 ஆயிரம் டன் கடல்மீன் உற்பத்தி செய்யப் பட்டது.

## பொது அறிவுப் புதையல்!








1. மகாத்மா காந்தியடிகளால் ''பிறவித் தலைவன்'' என்று பாராட்டப்பட்டவர் யார்?
2. இந்தியாவின் ஒரே ஆண் நதி எனக் கருதப்படும் நதி எது?
3. தமிழ்நாட்டில் முதன் முதலில் எந்த ஊரில் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டது?
4. அறிவியல் அறிஞர்களுக்கு எல்லாம் ஒரு பரிசுத் திட்டத்தை ஏற்படுத்தியவர் யார்?
5. திருக்குறளில் மொத்தம் எத்தனை வார்த்தைகள் உள்ளன?
6. கொசுவுக்கு எத்தனைப் பற்கள் இருக்கின்றன?
7. மனித செல்களில் ஆணா, பெண்ணா என்பதை நிர்ணயிப்பது எது ?
8. இந்தியாவில் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படும் நகரங்கள் யாவை?
9. 'உணவுப் பழம்' என்று பெயர் பெற்றது எது? (விடை அடுத்த பக்கம்)

**இ**ந்தியாவில் சுமார் 5,76,000 கிராமங்கள் உள்ளன. இதில் பெரும்பாலானவை நவீன வசதிகள் அற்ற குக்கிராமங்கள்.

கிராமப் பொருளாதாரம் வளர்ச்சி பெற, தபால் தந்தி தகவல் தொடர்பு அவசியமாகிறது. கிராம மக்களுக்கு இந்த வசதிகள் கிடைக்க, தபால் தந்தித்துறை எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

நாட்டிலுள்ள 1,25,000 அஞ்சலகங்களில் கிராமப்புறங்களில் மட்டும் 1,12,036 அமைந்துள்ளன. இருப்பினும் அஞ்சலக வசதியின்றி இன்னமும் பெருமளவிலான கிராமங்கள் இருக்கின்றன. தற்போதுள்ள விதிமுறைகளை வைத்து இப்பகுதிகளில் நிரந்தர அடிப்படையில் அஞ்சலகங்களை அமைப்பது முடியாது. ஆகவே, இப்பகுதிகளுக்கு நடமாடும் அஞ்சலக வசதிகள் செய்யப்படுகின்றன.

# சார், போஸ்ட்!

நடமாடும் அஞ்சலகக் கிளை போஸ்ட் மாஸ்டர், பல்வேறு கிராமப் பகுதிகளுக்கும் சென்று தபால் சாதனங்களை விற்க வகை செய்கிறார். நாடெங்கும் 500 நடமாடும் அஞ்சலகங்கள் செயல்பட்டு வந்தன. தற்பொழுது 27,000 நடமாடும் அஞ்சலகங்கள் செயல்பட்டு வருகின்றன. தபால்தலைகள் விற்பனைக்காக கிராமப் புறங்களில் 7,790 ஏஜண்டுகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று 99.5 சதவிகித கிராமங்கள் தினமும் தபால் பட்டுவாடா வசதியைப் பெற்றுள்ளன.

தொலைபேசி வசதி கிராம மக்களுக்குப் பல வழிகளில் உதவுகிறது.

வட்டார வளர்ச்சி, வட்டார அலுவலகம் மாவட்ட அலுவலகங்களுடன் கிராமவாசிகள் சுலபமாக தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுடியும்.

சாதாரண சமவெளிப்பகுதிகளில் குறைந்தது 5,000 மக்கள் தொகையும், மலைப் பகுதிகளிலும் பின்தங்கியப் பகுதிகளிலும் 2,500க்கு மேற்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் தொலைபேசி மற்றும் தந்தி வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் 1978-83 ஆண்டுக் காலத்தில் 15,000 தொலைபேசி - டெலிகிராப் வசதி இணைந்த அலுவலகங்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 3,000 அலுவலகங்கள் பூர்வ குடி மக்கள் வாழும் மலைப் பகுதிகளில் நிறுவப்படும். தற்பொழுது நாடெங்கும் சுமார் 9,000 தொலைபேசி நிலையங்கள் செயல்படுகின்றன.

தபால் தந்தித்துறை தனது சேவை மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் உதவி வருகிறது. பல வகைகளில் பயனுள்ள செய்திகளை இந்த சேவை மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் தபால் தந்தி சேவைத் திட்டங்கள் உதவுகின்றன.

**விடைகள் :**

1. சுபாஸ் சந்திரபோஸ்.
2. பிரம்மபுத்திரா.
3. திரூர் (செங்கல்பட்டு மாவட்டம்)
4. ஆல்பிரெட் நோபெல்.
5. 14 ஆயிரம் வார்த்தைகள்.
6. 47 பற்கள்.
7. மனித செல்களிலுள்ள குரோமோசோம்கள்.
8. ஹைதராபாத்—செகந்திராபாத்.
9. வாழைப்பழம்.

—இரா. ஜோசப்.

# வாழ்வுக்குரிய ஔடதம்

புலவர் ப. தேவகுரு


அன்பாய் நடக்கப் பழகிடு
ஆற்றல் பெருக்கத் துடித்திடு
இரக்கம் மனதில் வளர்த்திடு
ஈகைக் குணத்தைப் பெருக்கிடு

உண்மை பேசி வளர்ந்திடு
ஊக்கம் உயர்வாய்க் கருதிடு
எளிய வாழ்வைத் துவக்கிடு
ஏற்றங் காண உழைத்திடு

ஐயம் நீங்கப் படித்திடு
ஒன்றே குலமென உணர்ந்திடு
ஓதும் இந்த நற்பழக்கம்
ஔடத மாகும் வாழ்வுக்கு!

கோழிகள் குடிக்கும் நீரில் 10 சதவிகிதம் கடல் நீரைச் சேர்த்தால் என்ன விளைவுகள் ஏற்படும்? கடல் நீர் கலந்த நீரைக் குடித்த கோழிகளின் இறகுகள் பலம் வாய்ந்ததாக இருக்கும். அதனால் கோழிகளின் உடல் வெப்பம் காக்கப்பட்டு அதிக முட்டைகள் இட வாய்ப்பு உள்ளது. கூடுதல் எடை இறைச்சியையும் பெற முடியும். ஆர்தர் ஸ்டேடல்மேன் என்ற ஆய்வாளரின் கண்டுபிடிப்புத்தான் இது.

# நஞ்சை, புஞ்சை இரு நில விவசாயத்திற்கும் ஏற்றது.



## டிஸக் கலப்பை

உங்கள் உழவுத் தொழிலை நீங்கள்
உட்கார்ந்தபடியே செய்ய உதவும்.
30 அங்குல அகலமும் 8 அங்குல ஆழமும்
உழக்கூடியது.

புவனு



**மினிடில்லர்**
நான்கு டிஸ்க்குகள்
இணைக்கப்பட்டது

*விவரங்களுக்கு :*

**புவனு அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன்**
72, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

S.R.A.A.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

## 1—11—80

தமிழகம் முழுவதிலும் உள்ள முதியோர் உதவித்தொகை பெறுவோர், உடல்ஊன முற்றவர்கள் 1 இலட்சத்து 51 ஆயிரத்து 224 பேருக்கு வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கம்பம் நகரில் துவக்கி வைத்தார்கள்.

## 2—11—80

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு ரூ. 38 இலட்சம் செலவில் காசநோய்க்கு இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## 3—11—80

தமிழ் மாநிலம் தோன்றிய 25ஆம் ஆண்டை அடுத்த ஆண்டு வெள்ளிவிழா நிறைவு ஆண்டாக தமிழக அரசு சிறப்பாகக் கொண்டாடும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கூறினார்கள்.

விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் போன்றவைகளை அமைக்க ரூ. 102 கோடி செலவிடப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்கள்.

## 4—11—80

தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையில் பணியாற்றும் 600க்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஊதிய உயர்வு முன் தேதியிட்டு அக்டோபர் மாதம் 1ந்தேதி முதலே அமலாக்கப்படும். இந்த ஊதிய உயர்வினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

தமிழ்நாட்டில் மின்சார வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படுவதுபோல நகரசபையில் பணிபுரியும் மின்சார ஊழியர்களுக்கும் வழங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார்கள்.

## 5—11—80

விவசாயிகள் அரசிடம் இருந்து பெற்றுள்ள 31 வகையான தக்காவிக் கடன்களை ரத்து செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இச்சலுகைகள் 31.3.80 வரை அனுமதிக்கப்பட்ட கடன் திட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

## 6—11—80

தென்னார்க்காடு மாவட்டம் பண்ருட்டி அருகே வடக்குத்து என்ற இடத்தில் ரூ. 487 இலட்சம் செலவில் அமைக்கப்படும் கங்கப்பா காகித ஆலை மே மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுடன் இந்த ஆலை அமைக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 10 ஆயிரம் டன் அளவுக்கு பலவகை காகிதங்களை இந்த ஆலை தயாரிக்கும்.

## 7—11—80

தமிழ்நாடு முழுவதும் உள்ள நகரப் பேருந்துகளில் பேருந்துக் கட்டணம் 17—11—80 முதல் குறைக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

## 8—11—80

அரசுத் துறைகளில் 10 ஆண்டுக் காலம் பணியாற்றிய தட்டெழுத்தர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்களுக்கும் பதவி உயர்வோடு ஊதிய உயர்வும் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

தொகுப்பு

மருது

**9—11—80**

தமிழ்நாட்டில் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 40 ஆயிரம் கிராமங்களில் கிராமத் தண்ணிறைவுத் திட்டத்தின் மூலம் குடிதண்ணீர், சாலை வசதி, மருத்துவப்பணி போன்ற மக்களின் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப் படும் என மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தை வேலு அவர்கள் தெரிவித்தார்கள்.

**11—11—80**

திருச்சி மாவட்டத்தில் கைவினைஞர்களுக்கு 130 சிறுதொழில் கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்கள்.

**12—11—80**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 66 ஆயிரம் எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ரூ. 278 கோடி செலவிடப்படும் என்று மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் திரு கா.ராசா முகமது தெரிவித்தார்.

**13—11—80**

குவிண்டால் நெல்லுக்கு ரூ. 115 என்றும், கரும்பு டன்னுக்கு ரூ. 175 என்றும் தமிழக அரசு விலை நிர்ணயித்துள்ளது. மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட நெல்லுக்கு ரூ. 10ம் கரும்புக்கு ரூ. 45 ம் கூடுதலாக தமிழக அரசு அளித்திருக்கின்றது.

**14—11—80**

தமிழ்நாடு பரிசுச் சீட்டில் தற்பொழுது முதல் பரிசு ரூ. 50 ஆயிரம் வழங்கப் படுகிறது. இது ரூ. 1 இலட்சமாக உயர்த்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

**15—11—80**

இராமநாதபுர மாவட்டத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன் ரூ. 9 கோடியே 8 இலட்சத்தை ரத்து செய்யத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

---

# பார்த்தோம் படித்தோம்

'அண்ணாவின் சிந்தனைகள்' என்ற தலைப்பில் ஒரு பக்கம் ஒதுக்குவீர்களா ?

—இராம. நடராசன்,
நீர்முள்ளிக்குட்டை.

குறைந்த விலையில் நிறைந்த தகவலைத் தரும் ஒரே இதழ் தமிழரசு.

ஜி.டி. ராஜா,
கீழப்பழுவூர்.

கல்வி சம்பந்தமான கேள்வி-பதில் பகுதி ஒன்றைத் துவக்கினால் மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

—பி.வி. ஐசக்,
ஆப்பக் கூடல்.

ஒவ்வொரு இதழிலும் அனைத்துத்துறைகள் பற்றிய செய்திகளும் இடம் பெற வேண்டும்.

—செ. அக்பர் அலி,
அருப்புக்கோட்டை.

நேருவைக் குறித்து அரசுக் கவிஞர் எழுதியிருந்த கவிதை அருமையிலும் அருமை!

—ஜி. கோவிந்தன்,
ராயப்பேட்டை.

'தமிழ் வளர்த்த பெரியார்கள்' வரிசையில் பரிதிமாற் கலைஞர் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது.

—பு. இளங்கோ,
திருவையாறு.

16—10—80 இதழ் முகப்பு அருமை. 'இரண்டே பெற்று இனிதே வாழ்க' என்பதைச் சொல்லாமல் சொல்லியது கடைசி அட்டை

—ஏ. ஜெயசங்கரி,
சங்கரன் கோவில்.

மாணவர்களுக்கேற்ற நல்ல பல செய்திகளைத் தருகிறது, மாணவர் பக்கம்.

—கி. மு. ஷம்மிகுமார்,
வேலூர்.

''சீரகம்'' கட்டுரை, 'நூல் நயம்' பகுதி தெவிட்டாமல் இனித்தது.

—கிங்கிலியார்.
சென்னை-1.

மாணவர் பக்கத்தில் வரும் கேள்வி இங்கே—பதில் இங்கே பகுதி அருமை.

—கே. மாத்யூ,
கச்சூர்.

பெரியோர்களின் பொன் மொழிகளை நிறைய வெளியிடவும்.

—கே. பி. முருகேசன்,
அழகுப்பட்டி.

'அரசின் அறிவிப்புக்கள்' பகுதி பாராட்டத்தக்கது மட்டுமல்ல, மிகவும் பயன்தரத் தக்கதுமாகும்.


—என். பாபு,
திண்டுக்கல்.

தமிழக அரசு ஆற்றிவரும் நற்பணிகளை, 'தமிழரசு' மூலம் நன்கறிய முடிகிறது. இந்தப் பணியைச் சிறப்புறச் செய்யும் தமிழரசுக்கு நன்றி.

—கே. ஜகந்நாதன்,
சேலம்.

'தமிழரசு' இதழில் வெளிவரும் கட்டுரை, கவிதை, துணுக்குகள் அனைத்தும் சிறப்பாகவும், படிப்பினையாகவும் இருக்கிறது. புதுமை அம்சங்களைத் தொடர்ந்து வெளியிடவேண்டும்!

—எஸ். எஸ். வாசன்,
தென்எலப்பாக்கம்.



# ஓட்டுநர் பணிக்கு ஒப்பற்ற பயிற்சி

-ராஜேந்திரன்

தமிழகத்தில், 1978ல் உரிமம் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் எத்தனை? அதே ஆண்டில் நாடெங்கும் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை? அந்த விபத்துக்களிலே உயிரிழந்தோர் எண்ணிக்கை என்ன? என்பது பற்றிய விவரங்கள் அண்மையிலே தரப்பட்டிருக்கின்றன.

1978ல் 2 லட்சத்து 54 ஆயிரத்து 453 மோட்டார் வாகனங்கள் உரிமம் பெற்றிருக்கின்றன. அவற்றில் பஸ்கள் 11,158; லாரிகள் 25,471. அதே ஆண்டில் இத்தகைய வாகனங்களின் மூலம் ஏற்பட்ட 1338 சாலை விபத்துக்களிலே 1435 பேர் ஆண்களும் பெண்களும் பச்சிளம் தளிர்களுமாக உயிரிழந்திருக்கிறார்கள்.

இத்தகைய விபத்துகளுக்கெல்லாம்அடிப்படைஎன்னஎன்பதைப் பார்க்கிறபோது வண்டி வாகனங்களைச் செலுத்துகின்ற டிரைவர்களின் திறமைக்குறைவு, அல்லது கவனக்குறைவு ஆகியவையே காரணம் என்பது தெரியவந்தது.

இத்தகைய பிரச்சினைகளை உண்டாக்காத டிரைவர்களை உருவாக்குகிற நல்ல நோக்கத்தோடு தான் தமிழக அரசின் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் 'கனரகப் போக்குவரத்துபேருந்து ஓட்டுநர்பயிற்சி' ஏற்படுத்தப்பட்டது.

'இந்த நிறுவனத்தின் மூலம் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டபோது, அதன் இணை இயக்குநரான திரு அ. அய்யாசாமி கூறியதாவது:

'பொறுமையுடனும், தற்காப்புடனும், திறமையுடனும், தன்னம்பிக்கையுடனும், ஓட்டுகின்ற கனரக ஓட்டுநர்களை நாங்கள் இங்கே உருவாக்குகிறோம்.'


சென்னை - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், கும்மிடிப்பூண்டியில் இப்போது செயல்பட்டு வருகின்ற இந்த நிறுவனம் இதற்கு முன்பாகத் தரமணியில் செயல்பட்டுவந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடிப்பூண்டியில் பர்மா அகதிகள் முகாம் அருகே மத்திய அரசு புனர்வாழ்வுத் துறை நடத்தி வந்த கனரகப் போக்குவரத்து வாகனப் பழுதுபார்க்கும் பயிற்சி நிலையம் இருந்த இடத்தில் இந்த ஓட்டுநர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

அதாவது - பயிற்சி மாநில அரசினுடையது. தரப்படுகிற இடம் மத்திய அரசினுடையது. சென்னைக்கும் அந்தப் பயிற்சி நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 45 கிலோ மீட்டர்.

ஓட்டுநர் பயிற்சி பெற்ற உரிமம் பெறுவது அவ்வளவு லேசான காரியமில்லை. சாதாரண வாகனங்களுக்கு உரிமம் பெற்ற பின் 'ஹெவி' க்கான உரிமம் பெற கிட்டத்தட்ட இரண்டாண்டுக் காலம் ஆகும். ஆனால் இந்தப் பயிற்சிப் பிரிவு மாணவர்களுக்கு ஆர்.டி.ஓ. மூலம் ஆறே மாதத்தில் உரிமம் கொடுக்கப்பட்டு வருகிறது.

கனரகப் போக்கு வரத்துப் பேருந்து ஓட்டுநர் பயிற்சி முகாமிலிருந்து 1980 மார்ச் வரை 245 பயிற்சியாளர்கள் நல்ல முறையிலே பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர்.

இந்த நிறுவனத்திலே உள்ள பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 208லிருந்து 416 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவற்றில் 200 இடங்கள் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் அகதிகளுக்கு ஒதுக்கப்படும். மற்ற 216 இடங்கள் இந்தியக் குடிமக்களுக்கு.






32 வார காலம் இதில் சேருவோருக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.


பயிற்சி பெறுவதற்குத்தேவையான வாகனங்கள், பராமரிப்பு முறைகள், பயிற்சி உபகரணங்கள் ஆகிய யாவும் இப் பயிற்சிப் பிரிவிலேயே இருக்கின்றன.


ஒட்டுநர் பயிற்சிப் பிரிவு கும்மிடிப்பூண்டியில் இயங்கத் தொடங்கிய பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் 64 பேர்களாவர். பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களில் பெரும்பாலோர் பிற்பட்ட வகுப்பினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருமே யாவர். எட்டு வாரங்களுக்கு ஒரு முறை 64 மாணவர்கள் கொண்ட ஒரு புது அணி அமைக்கப்படும்.

இங்கே பயிற்சி முடிப்போருக்குத் தமிழகம் முழுதும் மட்டுமே அல்ல; பிற மாநிலங்களிலேயும் கூட வேலை வாய்ப்புக் காத்திருக்கிறது.

''இப்போது கண்டக்டர் பயிற்சி முடித்து நிறையப்பேர் வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால் டிரைவர்கள் அப்படி இல்லை. அந்த வேலைக்கு எப்போதுமே ஆள் பஞ்சம் இருந்து வருகிறது. பல்லவன் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் டிரைவர்கள் தேவைப்படுகிறபோது, இங்கே தெரிவிப்பார்கள். நாங்களே எங்கள் பயிற்சி முகாமிலிருந்து பயிற்சி முடித்தவர்களை அனுப்புகிறோம். ஆகவே, இங்கே பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைப் பஞ்சமில்லை!'' என்றார் இந் நிறுவன இயக்குநர் திரு அ. கிருட்டிணமூர்த்தி. ''எங்கானாலும் நேர்முகத் தேர்வுக்குப் பிறகுதான் எடுத்துக் கொள்ளப் படுவார்கள். எங்கள் பயிற்சி முகாமிலிருந்து சென்றவர்கள் எப்படிப்பட்ட தேர்விலும் எளிதில் வென்று விடுவார்கள்'' என்பது உறுதி''

இந்தப் பயிற்சியில் சேரவேண்டுமானால் பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற தகுதி எதிர்பார்க்கப்படுகிறது. 20 வயதுக்கு மேல் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி உடல், மன நிலைத் தகுதிகள் பெரிதும் வேண்டப்படுகின்றன. தமிழே பயிற்சி மொழியாகும். பயிற்சி பெற வருவோருக்கு விளையாட்டுப் பயிற்சி தேர்வு இருத்தல் நல்லது. இவர்கள் 160 செண்டி






மீட்டர் உயரத்திற்குக் குறையா மலும், 50 கிலோ கிராம் எடைக் குக் குறையாமலும் இருக்க வேண்டும். பயிற்சி இலவசம்.

கும்மிடிப்பூண்டியில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்கி நடத் தப்படுகிற இந்த கனரகப்போக்கு வரத்து பேருந்து ஒட்டுநர் பயிற்சி யின் துவக்கவிழா அண்மையில் தான்(18.11.80) நடைபெற்றது. பயிற்சியைப் பல்லவன் போக்கு வரத்துக் கழக மாவட்டப் பிரிவு நிர்வாக இயக்குநர் திரு ஆர். கணேசன் தொடங்கி வைத்தார். திட்டத்தின் குறிக்கோளை விளக்கி சாலைப்போக்குவரத்து நிறுவன இயக்குநர் திரு அ. கிருட்டிணமூர்த்தி பேசினார். நிறுவன இணை இயக்குநர் திரு அ. அய்யாசாமி நன்றி கூறினார்.

விழாவுக்குச் சென்றிருந்த நாம் பயிற்சி பெறுவோருக்கு அளிக்கப்படுகிற பாடத்திட்டம் பற்றி விசாரித்தோம்.

ஒட்டுநர் பயிற்சித் திட்டத்தில் வகுப்பறை ஆதாரக்கல்வியும், சாலைகளில் செய்முறைக் கல்வி யும் முறையாகப் போதிக்கப்படு கின்றன. பாடத் திட்டத்தில்— வாகனம் ஒட்டும் தொழில் நுட் பக் கலை, போக்குவரத்து விதி களும் ஒழுங்கு முறைகளும், வாக னப் பராமரிப்பும் ,சிறு பழுதுகள் செப்பனிடும் முறையும், நடத்து னர் கல்வி, மக்கள் தொடர்புக் கல்வி, முதலுதவிக் கல்வி ஆகிய பிரிவுகள் அடங்கியுள்ளன.

மாணவர்கள் எப்படிப் பயிற்று விக்கப்படுகிறார்கள் என்பதைத் தொழிற் கூடத்தினுள்ளே செல் லும் நமக்கு நிறுவனத் துணை இயக்குநர் திரு சி. எம். கினி விளக்குகிறார்.

பேருந்தின் தனித்தனிப் பகுதி கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள் ளன. சக்கரமில்லாமல் ஒரு கார் வெறும் எஞ்சினோடு நிறுத்தப் பட்டுள்ளது. அதன் முன்னால் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி போன்ற ஒன்றில் சாலைப் போக்குவரத்து திரையிடப்படு கிறது. 'ஸ்டியரிங்' பிடித்திருப் பவர், அந்தக் காட்சியில் தெரி கிற போக்குவரத்துக்கு ஏற்ற படி தான் அமர்ந்துள்ள வண்டி யின் கருவிகளை இயக்கவேண் டும். இப்படியொரு காட்சிக் கருவிப் பாடமுறை!

இதேபோல் தனித்தனியே— பல்சக்கரம் இயங்கும் முறை, வால்வுகள் இயங்கும் முறை, எரி பொருள் எரியும்முறை, கியர் போடும் முறை, பொறியினை குளிர வைக்கும் முறை, அதிர்ச்சி தாங்கி இயக்கும் முறை, பொறி எண்ணெய் இயக்கம் ஆகியவை தரப்படுகின்றன.




சாலைப் போக்குவரத்து நிறு வனத்தாரால் அளிக்கப்படுகின்ற இந்த ஒட்டுநர் பயிற்சியானது, வளர்ந்து வருகின்ற மக்கட் பெருக்கத்தில் மோட்டார் வாகன டிரைவர்களாகத் தொழில் புரி வோருக்கு மிகவும் பயனுள்ள தும் மிகமிக அவசியமானதும் ஆகும்.

# பாரதி நூல் அறுபது

## சீனி. விசுவநாதன்

இன்று நாம் பெரிய பெரிய தொகுதிகளாகக் காணும் மகாகவி பாரதியின் படைப்பிலக்கியங்கள் அதாவது கவிதைகளாகட்டும் - கட்டுரைகளாகட்டும் - கதைகளாகட்டும்-எவையானாலும், அவை பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்டு, சிறு சிறு நூல்களாகவே தான் வெளிவந்தன.

மகாகவி பாரதி, தாம் உயிரோடிருந்த காலத்திலேயே ஒரு சில நூல்களைப் பதிப்பித்தார்; ஒரு சில கவிதைப் படைப்புக்களைத் தம்மால் அன்புடன் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட திரு பரலி.சு. நெல்லையப்பர் அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்தார். ''சுதேசமித்திரன்'' அலுவலகப் புத்தகசாலையும் ஒரு சில நூல்களை வெளியிட்டன.

பாரதி எழுதிக் குவித்தவையோ ஏராளம்; ஆனால் நூல்வடிவம் பெற்றவையோ மிகக் குறைந்த அளவிலேயே இருந்தன. தொடர்ந்து வெளியாகாமல், எப்போதோ அத்தி பூத்தாற்போலவே வெளியாயின. இப்படி வெளிவந்தவை எண்ணிக்கையில் மிகக் குறைவே.

பாரதி, தம் ஆயுட்காலத்திலேயே தம் படைப்புக்களை எல்லாம் நூல் வடிவில் மிக அழகிய முறையில்-மேனாட்டு நூல்களுக்கு இணையாக-அழகழகான படங்களுடன்அச்சிட வேண்டுமென ஆசைப்பட்டார். தாம் திட்டமிட்டபடி நூல்களை அச்சிடப் போதிய மூலதனம் கையில் இல்லாத காரணத்தால், பாரதி தன் நண்பர்களுக்கும் நன்கு அறிமுகமானவர்களுக்கும் தம் வெளியீட்டுத் திட்டத்தை விளக்கி, சுற்றறிக்கை தயாரித்து அனுப்பி, பண உதவி கோரியிருந்தார். இதனால், எந்தவிதப் பலனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. என்றாலும் பாரதி மனம் சோர்ந்துவிடாமல், தொடர்ந்து தமது நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்.

இரண்டாம் முறையாகச் ''சுதேசமித்திர''னில் பணியாற்ற அழைப்பு வந்ததும், அதனை மனமார ஏற்று, கடையத்திலிருந்து சென்னை சேர்ந்ததும் சென்னை தமிழ் வளர்ப்புப் பண்ணை என்ற நிறுவனத்தின் பெயரால் ஒரு விளம்பரத்தை வெளியிடச் செய்கிறார். ''தமிழ் வளர்ப்புக்கு-ஒரு வேண்டுகோள்'' என்ற தலைப்புடன் வெளியான அந்த விளம்பர அறிக்கையில் மகாகவி பாரதியின் பெருமை 'பூமண்டலம் நிறைந்த கீர்த்தி'யாகப் புகழப்பட்டிருந்தது. இந்த வேண்டுகோள் முயற்சியும் தகுந்த பலனை அளித்ததாகத் தெரியவில்லை.

பாரதியாரின்
இளவல்
விசுவநாத ஐயர்



உலகைத் தம் பாட்டுத் திறத்தாலே உய்விக்கப் பாடுபட்ட மகாகவி பாரதி தம் புத்தக வெளியீட்டு ஆசைக்கனவு நிறைவேறாத ஒரு நிலையிலேயே, 1921 செப்டம்பர் 11ந் தேதி நள்ளிரவில் காலமானார்.

மகாகவி பாரதி மரணத்தைக் கடந்ததும், தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில் பாரதி நூல்கள் வெளியிடப் பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியிருந்தார். இதையடுத்து, பாரதியின் நண்பர்களில் ஒரு சிலர் கூடி, பாரதி நூல்கள் வெளியிடுவதற்கென ஒரு குழுவையும் ஏற்படுத்தினார்கள். அதன் விளைவாகப் பாரதியின் மனைவி செல்லம்மாளும் அப்பாதுரையும் சென்னையில் 1921ஆம் ஆண்டு இறுதியில் பாரதி ஆச்ரமம் என்ற புத்தக நிலையத்தை நிறுவினார்கள்.


இந்த பாரதி ஆச்ரமம் மகாகவியின் பன்னிரண்டு நூல்களை வெளியிடுவதெனத் திட்டமிட்டு முதலில்-அதாவது 1922ல் சுதேச கீதங்கள் என்ற தலைப்பில் இரு தொகுதிகளை வெளியிட்டது. மூன்றாம் தொகுதி-குயில்பாட்டு- கண்ணன்பாட்டு-பாரதி அறுபத்தாறு-என்ற நூலை 1923ல், ஒரு சில நண்பர்களின் விருப்பப்படி பரலி.சு. நெல்லையப்பர் உள்ளிட்ட ஒரு பஞ்சாயத்தார். வெளியிட்டனர். எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை உற்சாகமளிக்கும் வகையில் அமையாத காரணத்தால், நூல் பதிப்புப் பணிகள் ஸ்தம்பித்தன. மேற்கொண்டு புதிய நூல்கள் எதுவும் வெளியாகவில்லை. பாரதி ஆச்ரமும் தொடர்ந்து தொழிற்படவில்லை.

இதன் பின்னர், 1924ல் பாரதி பிரசுராலயம் தோன்றியது. இந்தப் பிரசுராலயம்தான் முறையாகத் திட்டமிட்டு, மகாகவியின் நூல்களை வெளியிட்டது. 1949ம் ஆண்டு வரை அதாவது பாரதி நூல்களின் பதிப்புரிமை அரசுடைமையாகும் வரை-பாரதி பிரசுராலயம் பல நூல்களைப் பதிப்பித்தது. பாரதி பிரசுராலயம் தோன்றியில்லையானால், மகாகவி பாரதியார் படைப்பிலக்கியங்கள் நமக்குக் கிடைத்திரா என்றே சொல்லி விடலாம். ஆக, பழுதடைந்திருந்த கையெழுத்துப் பிரதிகளிலிருந்தும், கைபட்டால் சேதமடையக் கூடிய நிலையிலிருந்த பத்திரிகை ஏடுகளிலிருந்தும் பாரதி எழுத்துக்களைத் தேடிப்பிடித்தும் தமிழக மக்களுக்கு வழங்கிய பெருமை பாரதி பிரசுராலயத்திற்கே தனி உரிமை. பிரசுராலயத்தின் நிறுவனர்களான திரு சி.விசுவநாத ஐயர் (பாரதியின் இளைய சகோதரர்), ஹரிஹர சர்மா, நடராஜன்-ஆகியோர் நமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

இன்றும் நம்மிடையே, வாழ்ந்து வரும் பாரதியின் இளைய சகோதரர் திரு சி.விசுவநாத ஐயர் அவர்கள் தான் பாரதியின் ஆங்கில எழுத்துக்களைத் தேடிப் பதிப்பித்தார். அந்தக் காலத்தில் அதாவது 1914- 1915 ஆகிய கால கட்டங்களில் சென்னையிலிருந்து வெளியான 'New India', common weal போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளில், இருந்த பாரதி எழுத்துக்களையும், பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த Arya என்ற பத்திரிகையில் இருந்த கட்டுரைகளையும், பாடல்களையும் சேகரித்து 1937-ல் அவற்றை நூல் வடிவில் கொணர்ந்தார். பெருமதிப்பிற்குரிய இந்தப் பெரியவர்தான் அண்மையில் தம்மிடமிருந்து பாரதிச் செல்வங்களையெல்லாம் தொல்பொருள் துறையினரிடம் கொடையாக அளித்தார். முன்னம் நாட்டுடைமையாக்கப்பட்டபோதும், தம் வசம் இருந்த பாரதி கையெழுத்துப் பிரதிகளையெலாம் அரசினரிடம் ஒப்படைத்தார். இச் செல்வங்கள் இன்றும் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக உள்ளன.



பாரதி நூல்களின் பதிப்புரிமையைப் பெரியவர் விசுவநாத ஐயரிடமிருந்துதான் தமிழக அரசு பெற்றது. நூல்களின் பதிப்புரிமையைப் பெற்ற தமிழக அரசு 1953 -1963 ஆகிய கால கட்டங்களில் கவிதைத் தொகுதியையும், வசனத் தொகுதியையும், கதைத் தொகுதியையும், சமூக அரசியல் கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டது. இதனிடையில், பாரதியன்பர்களில் ஒருசிலர், அதுவரை அச்சில் வராத பாரதி எழுத்துக்களைத் தேடிப் பிடித்து, நூல் வடிவாக்கியுள்ளனர். இம்மாதிரியான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பாரதியின் எழுத்துக்கள் நூல் வடிவம் பெற்றவையே இங்கு ஒருங்கிணைத்து பட்டியலாகத் தரப்பெற்றுள்ளது. தமிழ்மொழிக்குப் பாரதி அளித்த கொடைகள் இவை எனலாம்.




| எண் | புத்தகத்தின்பெயர் | பதிப்பாளர்(அ) பதிப்பாசிரியர் | முதற் பதிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | ஸ்வதேச கீதங்கள்-முதற்பாகம் | பாரதியார் | 1908 |
| 2 | புதிய கட்சியின் கொள்கைகள் (திலகரின் பிரசங்கங்கள் -மொழி பெயர்ப்பு) | பாரதியார் | 1908 |
| 3 | எங்கள் காங்கிரஸ் யாத்திரை | பாரதியார் | 1908 |
| 4 | ஜன்மபூமி (ஸ்வதேசகீதங்கள் 2.ம் பாகம்) | பாரதியார் | 1909 |
| 5 | மாதாவாசகம் | பாரதியார் | 1910 |
| 6 | ஞானரதம் | பாரதியார் | 1910 |
| 7 | பாஞ்சாலி சபதம் (முதற் பாகம்) | பாரதியார் | 1912 |
| 8 | மா தா மணிவா சகம் | தென்னாப்பிரிக்காவில் வெளியீடு | 1914 |
| 9 | புதிய ஆத்திசூடி | பாரதியார் | 1914 |
| 10 | (பொன்வால்நரி) (The Fox with Golden Tail) | பாரதியார் | 1914 |
| 11 | கண்ணன் பாட்டு | பரலி. சு.நெல்லையப்பர் | 1917 |
| 12 | நாட்டுப்பாட்டு | ,, | 1917 |
| 13 | பாப்பாப் பாட்டு | ,, | 1917 |
| 14 | முரசு | ,, | 1917 |
| 15 | மகாகவி சர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாசங்கள் | சுதேசமித்திரன் புத்தகசாலை | 1918 |
| 16 | பாரத ஜனசபை-முதற்பாகம் (காங்கிரஸ் சரித்திரம்-மொழிபெயர்ப்பு) | ,, | 1919 |
| 17 | பாரத ஜனசபை-இரண்டாம் பாகம் | ,, | 1920 |
| 18 | கதாமாலிகா | ,, | 1920 |
| 19 | சுதேச கீதங்கள்-முதற்பாகம் | பாரதி ஆச்ரமம் | 1922 |
| 20 | சுதேசகீதங்கள்-இரண்டாம் பாகம் | ,, | 1922 |
| 21 | குயில்பாட்டு - கண்ணன் பாட்டு-பாரதி அறுபத்தாறு | பாரதி பிரசுராலயம் | 1923 |
| 22 | பாஞ்சாலி சபதம் -இருபாகங்களும் இணைந்தது. | ,, | 1924 |

| | | | |
|---|---|---|---|
| 23 | பகவத் கீதை முன்னுரை | ,, | 1924—25 |
| 24 | பகவத் கீதை உரைவிளக்கம் | ,, | 1924—25 |
| 25 | சுதேச கீத சங்கிரஹம் | ,, | 1925 |
| 26 | சந்திரிகையின் கதை | ,, | 1925—26 |
| 27 | தராசு | பாரதி பிரசுராலயம் | 1928 |
| 28 | நவதந்திரக் கதைகள் | ,, | 1928 |
| 29 | வேதரிஷிகளின் கவிதை | ,, | 1928 |
| 30 | பதஞ்சலியோக ஸூத்ரம் | ,, | 1928 |
| 31 | விநாயகர் நான்மணிமாலை | ,, | 1929 |
| 32 | தேசிய கீதங்கள் | ,, | 1929 |
| 33 | தோத்திரப் பாடல்கள் | ,, | 1930 |
| 34 | வேதாந்தப் பாடல்கள் | ,, | 1930 |
| 35 | காட்சி | ,, | 1930 |
| 36 | சித்தக் கடல் | ,, | 1930 |
| 37 | பாரதிநூல்கள்-கட்டுரைகள் 1. தத்துவம் | ,, | 1935 |
| 38 | 2. மாதர் | ,, | 1930 |
| 39 | 3. கலைகள் | ,, | 1935 |
| 40 | 4. சமூகம் | ,, | 1935 |
| 41 | ஆசாபங்கம் (தாகூர் கதை-மொழி பெயர்ப்பு) | கமல நிலையம் | 1937 |
| 42 | தஷ்டபூஷணம் ,, | ,, | 1937 |
| 43 | கதைக்கொத்து | பாரதி பிரசுராலயம் | 1937 |
| 44 | Agni and other poems and translations | | 1937 |
| 45 | Essays and other prose fragments | ,, | 1937 |



| | | | |
|---|---|---|---|
| 46 | ஸ்வசரிதையும் பிறபாடல்களும் | ,, | 1938 |
| 47 | பத்திராதிபர் (தாகூர் கதை-மொழி பெயர்ப்பு) | கமலநிலையம் | 1939 |
| 48 | வேதரிஷிகளின் கவிதை தொடர்ச்சி | பாரதி பிரசுராலயம் | 1941 |
| 49 | பாரதி கீதத்திரட்டு (2ம் பதிப்பு) | ,, | — |
| 50 | பாரதி மணிமலர் | ,, | 1948 |
| 51 | பாரதி தமிழ் | அமுதநிலையம் | 1953 |
| 52 | சின்னச் சங்கரன்கதை | பாரதி புத்தக நிலையம் | 1956 |
| 53 | தாகூர் சிறுகதைகள்(மொழி பெயர்ப்பு) | அமுத நிலையம் | 1958 |
| 54 | பாரதி புதையல்-முதல் தொகுதி | ,, | 1958 |
| 55 | பாரதி புதையல்-இரண்டாம் தொகுதி | ,, | 1959 |
| 56 | பாரதி புதையல்-மூன்றாம் தொகுதி | ,, | 1975 |
| 57 | பாரதி தரிசனம்-முதல் தொகுதி | நியூசென்சுரி புக் ஹவுஸ் | 1975 |
| 58 | பாரதி தரிசனம்-இரண்டாம் தொகுதி | ,, | 1977 |
| 59 | சக்ரவர்த்தினி-கட்டுரைகள் | வானவில் பிரசுரம் | 1970 |
| 60 | மும்மணிகள் | ,, | 1979 |

பின்குறிப்பு:

கூடியவரை மகாகவி பாரதியாரே தமது நூல்களுக்குத் தலைப்பெயரிட்டு விட்டார்.



# பாரதி காட்டும் ஒருமைப்பாடு

புலவர் தமிழ்ப்பித்தன்

பாமரர்களும் பண்டிதர்களும் ஏககாலத்தில் போற்றிப் புகழும் வகையில் கவிதை யாத்தவர் பாரதியார். எளிய இனிய சொற்களால் பாமாலை கட்டியவர் அந்தப் பாவலர். சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்று துடித்து நின்ற அந்தக் கவிவாணர், இந்தியநாடு வெள்ளையரின் பிடியில் இருந்து விடுதலை பெறுவதற்குப் பாடுபட்டார்-பாட்டுக்குரல் கொடுத்தார். அதே நேரத்தில் இந்திய மக்கள் பலரிடையே அபூர்வமாகக் காணப்பட்ட-மிகப் பலரிடம்காணவே முடியாதிருந்த ஒற்றுமை உணர்வை-ஒருமைப்பாட்டு எண்ணத்தை வலியுறுத்திப் பாடினார். அவரது பாடல் ஒவ்வொன்றும் கோடி பெறும். அவற்றில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வலியுறுத்திக் கூறிய வள்ளுவர் வாழ்ந்த நாட்டில்-எப்படியோ வருணாச்ரமம் நுழைந்து விட்டது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேற்றுமை-உருவாகிவிட்டது. அந்த வேற்றுமை-நாட்டு மக்களை வேறுபடுத்தி-நாட்டின் பண்பாட்டைக் கூறுபடுத்தி-இழிநிலையை ஏற்படுத்தியது. அந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாத பாரதி குரல் கொடுக்கிறார்.

> ஜாதி மதங்களைப் பாரோம்-உயர்
> ஜன்மமித் தேசத்தி லெய்தினராயின்
> வேதிய ராயினு மொன்றே-அன்றி
> வேறு குலத்தின ராயினு மொன்றே.

என்று முழங்குகிறார்.

> எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
> எல்லாரும் இந்திய மக்கள்
> எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
> எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்றும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா என்னும் பெயர் பெற்ற பெரிய நாட்டை-சிறிய தீவிலிருந்து வந்து ஆங்கிலேயர்கள் ஆட்சிபுரிந்து அடிமைக் கட்டுக்குள் வைத்திருந்தார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்திய நாட்டு மக்களிடம் காணப்பட்ட ஒற்றுமையின்மைதான் என்பதைப் புரிந்து கொண்டு அனைவரையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் இறங்கினார் பாரதியார். ''சேர வாரும் ஜகத்தீரே' என்று மனித சமுதாயம் முழுவதையும் அழைத்த வள்ளலார் போல, ஒருமைப்பாட்டுக் குரல் கொடுக்கிறார் பாரதியார்.

> ''ஒன்றுபட் டாலுண்டு வாழ்வு-நம்மில்
> ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
> நன்றிது தேர்ந்திடல் வேண்டும்-இந்த
> ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்?''

என்று கேட்டு-ஒருமைப்பாட்டு உணர்வுதான் பெரும்பேறு என்பதை வலியுறுத்துகிறார்.

சுண்டைக்காய் சமஸ்தானங்களாக-சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிந்து நின்று பேதத்தையேற்படுத்திக் கொண்டிருந்த மாநிலங்களுக்குள்ளே ஒற்றுமை உணர்வு-ஒருமைப்பாட்டு எண்ணம் உருவாகவேண்டும் என்பதை அழகான ஒரு பாடலில் - காட்சி காட்சியாக வருணிக்கிறார்.

'வெள்ளிப் பனி மலையாம் இமயத்தின் மீது உலாவுவோம், மேலைக் கடலில் முத்தெடுப்போம், சிங்களத் தீவுக்குப் பாலம் அமைப்போம், சேதுவை மேடாக்கி வீதி போடுவோம், வங்கத்தில் வரும் நீரைக் கொண்டு மையத்து மாநிலங்களில் பயிர் செய்வோம்''. இப்படி எல்லாம் சொல்லிவிட்டு தமது காவியத்தின் மூலமாக ஓவியத்தைத் தீட்டிக் காட்டுகிறார் பாரதி.

> ''சிந்துநதியின் மிசை நிலவினிலே
> சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
> சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
> தோணிகளோட்டிவிளை யாடிவருவோம்



கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரியின் வெற்றிலைக்கு மாறு கொள்வோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

காசி நகர்ப்புலவர் பேசுமுறைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்

ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்

—இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் பிறமாநிலத்துடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்னும் உணர்வை இந்தக் கவிதைக் கோலத்தின் வாயிலாக பாரதியார் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்தியாவில் பலமொழிகள் பேசும் மாநிலங்கள் உள்ளன; பல்வேறு உணவுமுறைகள் கொண்ட மாநிலங்களும் உள்ளன. ஆனாலும் அவற்றின் ஊடே ஒருமைப்பாடு என்ற உணர்வு நூல்போல்-சரம்போல் காட்சி தருகிறது. பல்வேறு மொழிகள் பேசுகின்ற, பல்வேறு கலாச்சாரம் கொண்ட மக்கள் சேர்ந்து சோவியத் யூனியனை உருவாக்கவில்லையா? அதைப்போல-ஒரிசா என்றாலும்-கேரளம் என்றாலும்-கருநாடகம் - என்றாலும்-மராட்டியம் என்றாலும் தமிழகம் என்றாலும் அனைத்தும் இந்தியத் திருநாட்டின் அங்கங்கள் என்பதையும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையான மொழி உலவி வந்தாலும் அவற்றின் சிந்தனை ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்-இருக்க வேண்டும் என்பதையும் பாரதி அழுத்தமாகக் கூறுகிறார்.

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்-இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
சிந்தனை யொன்றுடையாள்

இந்திய நாட்டின் முப்பது கோடி மக்களும் (பாரதியார் வாழ்ந்த காலத்தில்) ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுடனும் வாழ்ந்து-வேற்று நாட்டவர்க்கு வியப்பை நல்கவேண்டும் என்று விரும்பிய பாரதி,

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பில் லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை

எனக் குறிப்பிடுகிறார்.

'ஊருக்கு நல்லது சொல்வேன். எனக்கு உண்மை தெரிந்து சொல்வேன்' என்று தொடங்கும் பாரதி ஒரு பூனையைக் கொண்டு ஒருமைப்பாட்டு உணர்வை மிக எளிதாக எடுத்துக் காட்டுகிறார்:

வெள்ளை நிறத்தொரு பூனை-எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை-அவை
பேருக் கொருநிற மாகும்.

எந்த நிறமிருந் தாலும்-அவை
யாவும் ஒரேதர மன்றோ
இந்த நிறம்சிறி தென்றும்-இஃது
ஏற்றமென் றுஞ்சொல்ல லாமோ



வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
—அதில்
மானிடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்-இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்

என்று குறிப்பிடுவதன் வாயிலாக-மனித இனத்திடம் ஒருமைப்பாட்டு உணர்வு தவழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார்.

அடுத்து, இதே பாடலில்,

அன்பென்று கொட்டுமுரசே-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்.
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

என்று குறிப்பிடும் பாரதியார், இறுதியில்,

ஒன்றென்று கொட்டு முரசே-அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே-இந்த
நானில மாந்தருக் கெல்லாம்

என்று முடிக்கிறார்.

பாரதி-தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் ஒரு சிற்றூரான எட்டையபுரத்தில் தோன்றியவர் என்றாலும் அவரது உணர்வு சிற்றூராகக் காட்சி தரவில்லை, அது துணைக் கண்டமாகக் திகழ்ந்திருக்கிறது; அவரது இதயம் எந்நாளிலும் ஒருமைப்பாடு என்னும் உயர்கொள்கையை நேசித்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அதன் எதிரொலிதான் அவரது பாடல்களில் எல்லாம் காட்சி தருகின்றது.


எனவே பாரதியின் பாடல் ஒருமைப் பாட்டுப் பயிரை வளர்க்க உதவும் உன்னதமான உரம்; அவரது சிந்தனை ஒருமைப் பாட்டு உணர்வை ஓங்கச் செய்யும் தென்றல் காற்று; அவரது செயல், ஒருமைப்பாட்டை உலகுக்கு உணர்த்தப் பயன்படும் ஒளி வெள்ளம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கண்களுக்கு குளுமையூட்டும்
பருத்தி, மற்றும் பருத்தியில் அச்சிட்ட
சேலைகள்; கோடைக் காலத்திலும்
குளிர்காலத்தைக்காட்டும். பல
வண்ணச் சேலைகள். நீடித்து
உழைப்பவை.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

தமிழரசு Licence No. TN/MS(C)/PP-23



தமிழ்நாடகத் தலைமையாசிரியர்
சங்கரதாஸ் சுவாமிகள்